# 9ம் வகுப்பு தமிழ்

1. "தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே" எனப்பாடியவர் யார் ?
   கம்பர்

2. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" எனும் பாடல் அமையப்பெற்ற நூலின் பெயர்,காண்டம் என்ன ?
   கம்பராமாயணம், பாலகாண்டத்தின் முதல் பாடல்.

3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை எனும் குறட்பாவில் பயின்று வந்த அணி ....
   எடுத்துக்காட்டு உவமை அணி

4. கம்பர் பிறந்த ஊர் எது?
   நாகப்பட்டிணம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்

5. கம்பர் இயற்றிய நூல்கள் என்ன?
   கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம்.

6. கம்பர் யாரிடம் அவைப்புலவராக பணிபுரிந்தார்?
   குலோத்துங்க சோழன்

7. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
   சடையப்ப வள்ளல்

8. கம்பரின் புகழ்பாடும் தொடர்கள் எவை?
   கல்வியில் பெரியவர் கம்பர், கவிச்சக்கரவர்த்தி

9. கம்பர் - காலம் ?
   கி.பி.12ம் நூற்றாண்டு

10. கம்பராமாயணத்தின் மூல நூல் எம்மொழியில் யாரால் எழுதப்பட்டது?
வடமொழி, வான்மீகி

11. "தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே" எனப்பாடியவர் யார் ?
கம்பர்

12. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" எனும் பாடல் அமையப்பெற்ற நூலின் பெயர்,காண்டம் என்ன ?
கம்பராமாயணம், பாலகாண்டத்தின் முதல் பாடல்.

13. நிறையுடைமை நீங்காமை வேண்டின் , பொறையுடைமை போற்றி ஒழுகப் படும் " எனும் குறட்பாவில் கூறப்படும் கருத்து
பொறுமையின் சிறப்பு

14. குறள் எனும் சொல்லின் பொருள் என்ன ?
குறுகிய அடிகளை உடையது

15. ....... சீர்களைக் கொண்ட .... அடி வெண்பாக்களால் ஆனது, திருக்குறள்.
7, 2

16. திருக்குறள், அறம்.... அதிகாரங்களாகவும், பொருள் .... அதிகாரங்களாகவும், இன்பம் ..... அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது.
38,70,25

17. திருக்குறளைப் போற்றிப் பாடிய நூலின் தொகுப்பு ....ஆகும்.
திருவள்ளுவமாலை

18. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களின் எண்ணிக்கை ...
10

19. திருக்குறளின் உரை கண்டவர்களுள் மிகச்சிறந்த உரை யாருடையது ?
பரிமேலழகர்

20. திருக்குறளின் உரையாசிரியர்கள் யாவர்?
தருமர், தாமதத்தர், மணக்குடவர், நச்சர்,பரிதி,பரிமேலழகர்,திருமலையர், மல்லர், பரிபெருமாள், காளிங்கர்.

21. விக்டோரியா மகாராணி காலையில் கண் விழித்ததும் முதலில் படிக்கும் நூல் எது ?
திருக்குறள்

22. இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள் எத்தனை ? அவை யாவை?
4, இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ - ஆசிய மொழிகள், சீன- திபெத்திய மொழிகள்

23. நம் நட்டில் பேசப்ப்படும் மொழிகளின் எண்ணிக்கை என்ன ?
1300+

24. தனக்கெனத் தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழி ....
மூலமொழி

25. மூல மொழியிலிருந்து தோன்றி வளர்ந்த மொழி ....
கிளைமொழி

26. இந்திய நாட்டை "மொழிகளின் காட்சி சாலை" என வருணித்தவர் யார் ?
மொழியியல் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்

27. திராவிட மொழிகளின் எண்ணிக்கை என்ன ?
23+

28. திராவிட மொழிக்குடும்பங்களின் எண்ணிக்கை என்ன ?
3

29. திராவிடப்பெருமொழிகள் யாவை ?
தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

30. இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த நாகரிகம் ... ஆகும்
திராவிட நாகரிகம்

31. தென் திராவிட மொழிகள் யாவை ?
தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா

32. நடு திராவிட மொழிகள் யாவை ?
தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா

33. வட திராவிட மொழிகள் யாவை ?
குரூக், மால்தோ, பிராகுயி

34. திராவிடர் பேசிய மொழி எது ?
திராவிட மொழி

35. "திராவிட" எனும் சொல்லின் பொருள் என்ன ?
திராவிட நாடு

36. திராவிட மொழி, திராவிட இனம், திராவிட நாகரிகம் எனும் சொற்றொடர்களுள் திராவிடம் எனும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கூறியவர் யார் ? எந்த நூலில் கூறியுள்ளார்?
கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.

37. திராவிடம் எனும் சொல்லை முதலில் உருவாக்கியவர் யார்?
குமரிலபட்டர்

38. திராவிடம் எனும் சொல்லை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தவர் யார்?
கால்டுவெல்

39. மொழியியல் அறிஞர் தொடக்க காலத்தில் தமிழையும் அதன் கிளை மொழிகளையும் ........ அல்லது ..... என வழங்கினர்
தமிளியன் , தமுலிக்

40. திராவிட எனும் சொல் தமிழ் எனும் சொல்லிலிருந்து உருவானது எனக்கூறியவர் யார் ?
ஈராஸ் பாதிரியார்

41. கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம் எது ?
இலெமூரியாக் கண்டம்

42. தமிழில் இன்று நமக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பழமையான நூல் எது ?
தொல்காப்பியம்

43. தொல்காப்பியம் என்பது ... நூல்
இலக்கணம்

44. தொன்மை, தனித்தன்மை,மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம், பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மை பெற்ற மொழி....... எனப்படும்.
செவ்வியல் மொழி

45. மொழியை பிழையின்றி பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவும் துணைபுரிவது .... ஆகும்.
இலக்கணம்

46. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ?
10

47. செய்யுளில் ஓசை குறையும் போதும், சொற்களின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துக்கள் தமக்குரிய ...... மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பது .... ஆகும்.
2, அளபெடை

48. அளபு எனும் சொல்லின் பொருள்
மாத்திரை

49. அளபெடையின் வகைகள் யாவை ?
உயிரளபெடை, ஒற்றளபெடை.

50. உயிர் எழுத்துகளுள் அளபெடுக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன ?
உயிர்நெடில் எழுத்துக்கள் 7

51. உயிர் எழுத்துக்கள் அளபெடுக்கும் போது அவற்றுக்கு இனமான ...... எழுத்துக்கள் அதன் பக்கத்தில் வரும்.
குறில்

52. அளபெடுக்கையில் ஐகாரத்தின் இன எழுத்து எது ?
இ

53. அளபெடுக்கையில் ஔகாரத்தின் இன எழுத்து எது ?
உ

54. உயிரளபெடையின் வகைகள் யாவை ?
செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.

55. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடை ....
செய்யுளிசை அளபெடை

56. ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது .....
இன்னிசை அளபெடை

57. பெயர்ச்சொல் அளபெடுத்து, வினைசெய்ய பொருளில் வருவது .....
சொல்லிசை அளபெடை

58. கெடாஅ......... விடா அர்... எனும் சொற்களில் ......... வந்துள்ளது.
செய்யுளிசை / இசைநிறை அளபெடை

59. செய்யுளிசை அளபெடையில் மறுபெயர் என்ன ?
இசைநிறை அளபெடை

60. கெடுப்பதூஉம் எனும் சொல்லில் வந்துள்ள அளபெடை எது?
இன்னிசை அளபெடை

61. குடிதழீஇக்.. எனும் சொல்லில் வந்துள்ள அளபெடை எது ?
சொல்லிசை அளபெடை

62. தழீ எனும் சொல்லின் பொருள் என்ன ?
தழுவுதல்

63. தழீஇ எனும் சொல்லின் பொருள் என்ன ?
தழுவி

64. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன ?
11

65. ஒற்றளபெடையில் அளபெடுக்காத ஒற்றெழுத்துக்கள் யாவை ?
க்,ச்,ட்,த்,ப்,ற்,ர்,ழ்

66. "உன்னையே நீ அறிவாய்" எனக்கூறியவர் யார்?
சாக்ரடீஸ்

67. "தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா" என சிறப்பிக்கப்பட்டவர் யார்? யாரால் சிறப்பிக்கப்பட்டார்?
அறிஞர் அண்ணா, கல்கி

68. ஜார்ஜ் பெர்னாட்ஷா எந்த நாட்டை சேர்ந்தவர் ?
அயர்லாந்து

69. இரவின் அறுவடை என்னும் சிறுகதையை எழுதியவர் யார்?
புவியரசு

70. மக்களிலே மேல்கிழ்ழ் என்று விள்ளுவதை கிள்ளிவிட வேண்டும் என்று எண்ணியவர் யார்?
பாரதியார்

71. தமிழாக்கம் தருக
சுவிட்ச்
சொடுக்கி

ஐஸ்வாட்டர்
குளிர்நீர்

கூல் டிரிங்ஸ்
குளிர்சாறுகள்

கிரைண்டர்
மின் அரைவை

பிரிஜ்
குளிரூட்டும்பெட்டி

டீ
தேநீர்

வாஷிங்மெஷின்
வெளுக்கை இயந்திரம்

டெலிபோன்
தொலைபேசி

72. பொருள் தருக :

பொறுத்தல்
பொறுத்துக்கொள்ளுதல்

இறப்பினை
பிறர் செய்த துன்பத்தை

இன்மை
வறுமை

ஒரால்
தவிர்த்தல்

மடவார்
அறிவற்றார்

நிறை
சால்பு

ஒறுத்தாரை
தண்டித்தவரை

ஒன்றாக
ஒரு பொருட்டாக

பொதிந்து வைப்பர்
(மனத்துள்) வைத்துக்கொள்வர்

பொன்றும் துணையும்
உலகம் உள்ளவரை

திறனல்ல
செய்யத்தகாத

நோனொந்து
துன்பத்துக்கு வருந்தி

மிகுதியான்
மனச்செருக்கால்

மிக்கவை
தீமை

தகுதியான
பொறுமையால்

துறந்தார்
பற்றினை விட்டவர்

இறந்தார்
வரம்பு கடந்தவர்

இன்னா
தீய

நோற்கிற்பவர்
பொறுப்பவர்

நோற்பார்
நோன்பு மேற்கொள்பவர்

இன்னாச்சொல்
தீய சொல்

உளவாக்கல்
உண்டாக்குதல் (படைத்தல்)

நிலைபெறுதல்
காத்தல்

நீக்கல்
அழித்தல்

நீங்கலா
அலகிலா

அளவற்ற
அன்னவர்

அத்தகைய
இறைவர்

தலைவர்
இறைவர்

சரண்
அடைக்கலம்

அகழ்வாரை
தோண்டுபவரை

இகழ்வார்
இழிவுபடுத்துவோர்

தலை
சிறந்த பண்பு

73. இலக்கண குறிப்பு தருக :
யாவையும்
முற்றும்மை

அலகிலா விளையாட்டு
ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

ஆக்கல்
தொழிற்பெயர்

நீக்கல்
தொழிற்பெயர்

விளையாட்டு
தொழிற்பெயர்

மறத்தல்
தொழிற்பெயர்

பொறுத்தல்
தொழிற்பெயர்

நன்று
குறிப்பு வினைமுற்று

விருந்து
பண்பாகு பெயர்

ஒரால்
தொழிற்பெயர்

பொறை
தொழிற்பெயர்

நீங்காமை
எதிர்மறைத் தொழிற்பெயர்

போற்றி
வினையெச்சம்

ஒறுத்தார்
வினையாலணையும் பெயர்

பொதிந்து
வினையெச்சம்

தற்பிறர்
ஏழாம் வேற்றுமைத் தொகை

செய்யினும்
இழிவுச் சிறப்பும்மை

நொந்து
வினையெச்சம்

அறன்
ஈற்றுப்போலிகள்

திறன்
ஈற்றுப்போலிகள்

செய்தாரை
வினையாலணையும் பெயர்

விடல்
அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று

இறந்தார்
வினையாலணையும் பெயர்

துறந்தார்
வினையாலணையும் பெயர்

நோக்கிற்பவர்
வினையாலணையும் பெயர்

இன்னாச்சொல்
ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

உண்ணாது
வினையெச்சம்

பொறுத்தல்
தொழிற்பெயர்

அகழ்வார்
வினையாலணையும் பெயர்

இகழ்வார்
வினையாலணையும் பெயர்

74. பழமொழிகளுக்கு தமிழாக்கம் தருக

Bend the tree while it is young

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

As is the mother, so is her daughter
தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போலச் சேலை

A friend in need is a friend indeed
உயிர்காப்பான் தோழன்

A maon of courage never wants weapons.
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

blood is thicker than water
தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

75. கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளல், காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை ஆராய்ச்சிக்கு அழகு தமது முடிவை துணுந்துரைத்தல் இசைக்கு அழகு அதனை கேட்போர் நன்றெனப் புகழ்தல், அரசனுக்கு அழகு குடிமக்கள வருந்தாமல் காப்பவன் என புகந்துரைத்தல் என காரியாசான் குறிப்பிடுகிறார்.

76. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் யார் ?
காரியாசான்

77. காரியாசானின் ஆசிரியர் யார் ?
மதுரை தமிழாசிரியர் மாக்காயனார்

78. காரியாசானின் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் எதில் காணப்படுகின்றன?
சிறப்புப்பாயிரம்

79. காரியாசான் எந்த மதத்தைச் சார்ந்தவர் ?
சமணம்

80. காரியாசானுடன் பயின்ற மாணவர் யார் ?
கணிமேதாவியார்

81. சிறுபஞ்சமூலத்தில் இடம்பெற்ற கருத்துக்களின் தன்மை என்ன ?
பெரும்பான்மை அறக்கருத்துக்களும், சிறுபான்மை சமண அறக்கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

82. சிறுபஞ்சமூலத்தின் பாடல்கள் எண்ணிக்கை என்ன ?
கடவுள் வாழ்த்து + 97 வெண்பாக்கள்

83. சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற காரணமான நோய் தீர்க்கும் 5 மூலிகைகள் எவை ?
கண்டங்கத்திரி, சிறுவழுதுனை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி

84. ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் அதன் பொருளும் பின்னர் பலவிடத்தும் வரின் அது ..... அணியாகும்.
சொல்பின்வருநிலையணி

85. வனப்பு எனும் சொல்லின் பொருள் என்ன?
அழகு

86. "கண்வனப்புக் கண்ணொட்டம்.... " எனத் தொடங்கும் பாடலின் பயின்று வந்த அணியின் பெயர் என்ன ?
சொல்பின்வருநிலை அணி

87. பாண்டவர்கள் ஆட்சிபுரிந்த பிரதேசம் எது ?
இந்திர மாநகர் (இந்திர பிரஸ்தம்)

88. அத்தினாபுர மன்னர் யார் ?
துரியோதனன்

89. துரியோதனின் தந்தை யார் ?
திருதராட்டிரன்

90. "என்பியின் மக்க ளிருந்தர சாளும்..." இத்தொடரின் எம்பி என்பது யாரை குறிக்கும் ?
பாண்டு மன்னன்

91. ".... கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்.." இத்தொடரில் மடப்பிடி யாரை குறிக்கும் ?
பாஞ்சாலி

92. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய உரைநடை இலக்கியங்கள் யாவை ?
ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு.

93. பாஞ்சாலி சபதத்தின் மூல நூல் எது ?
வடமொழியில் வான்மீகி எழுதிய பாரதம்.

94. பாஞ்சாலி சபதம் எத்தனை பாகங்களை கொண்டது ?
2

95. பாஞ்சாலி சபதத்தின் சருக்கங்கள் எத்தனை ?
5. (சூழ்ச்சி சருக்கம், சூதாட்ட சருக்கம், அடிமைச்சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபத சருக்கம்)

96. பாஞ்சாலி சபதத்தின் பாடல்களின் எண்ணிக்கை என்ன ?
412

97. பாரதியார் ஆசிரியராக இருந்த இதழ்களின் பெயர் என்ன ?
சுதேசமித்திரன், இந்தியா

98. தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை என்றவர் யார் ?
பாரதிதாசன்

99. தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

100. நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா எனப்பட்டவர் யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

101. உரைநடைக்காலம் எது ?
20ம் நூற்றாண்டு

102. 20ம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக்கு வித்தாக அமைந்தவை எவை ?
பாரதியின் கவிதைகள்

103. "முப்பது கோடி முகமுடையாள்.. " எனப்பாடியவர் யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

104. "முப்பது கோடி முகமுடையாள்.. " எனும் பாடலில் கவிஞர் கூற வந்த மைய கருத்து என்ன ?
இந்திய ஒருமைப்பாடு

105. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் " என்றவர் யார் ?
சுப்பிரமணிய பாரதியார்

106. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் " எனும் பாடலின் மையக்கருத்து என்ன ?
தமிழின் வளர்ச்சி

107. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே எனப்பாடியவர் யார் ? அவர் கூறவந்த கருத்து என்ன ?
பாரதிதாசன். தமிழர் எழுச்சி

108. எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம் அல்லானும் அங்கில்லை பிறர்நலத்தை எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே" இப்பாடலின் மையக்கருத்து என்ன ?
பொதுவுடைமை

109. "கல்லை பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் திடுத்தவனும் நீதானோ" எனத் தாலாட்டுப் பாடியவர் யார்
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

110. "மங்க யராகப் பிறப்பதற்கே - நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என பெண்ணியம் பாடியவர் யார் ?
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

111. தமிழின் வளம் காண "சாலைகளில் பலதொழில்கள் பெருக வேண்டும் சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்" என்றவர் யார் ?
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

112. விடுதலைக் கவிஞர் யார் ?
நாமக்கல் கவிஞர்

113. உவமைகவிஞர் யார் ?
சுரதா

114. தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கோர் குணமுண்டு அமிழ்தம் அவனுடை மொழியாகும் அன்பே அவனுடை வழியாகும் என்றவர் யார் ?
நாமக்கல் கவிஞர்

115. பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும் பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும் என்றவர் யார் ?
நாமக்கல் கவிஞர்

116. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்றவர் யார் ?
நாமக்கல் கவிஞர்

117. ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால் அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற தீங்குடைய மனபோக்கர் வாழும்நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி : இவ்வடிகள் யாரால் எழுதப்பட்டது ?
முடியரசன்.

118. பாரதியார் வசன கவிதைகளை யாருடைய சாயலை ஒத்திருந்தன ?
அமெரிக்க கவிஞர் வால்ட்விட்மன்

119. பாரதிதாசனின் உரைநடைகள் அனைத்தும் .... கொண்டவை.
கவிதை நடை கொண்டவை

120. மணிக்கொடி இதழில் புதுக்கவிதை எழுதியவர்கள் யார் ?
ந.பிச்சமூர்த்தி, புதுமைபித்தன், கு.ப.இராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன்

121. எழுத்து இதழில் புதுக்கவிதை எழுதியவர்கள் யார் ?
எஸ்.வைத்தீஸ்வரன், தருமு சுவராமு, மணி, சி,சு.செல்லப்பா

122. மீரா என்ற புனைபெயர் கொண்டவர் யார் ?
மீ.ராசேந்திரன்

123. வானம்பாடி இயக்க உறுப்பினர்கள் யார் ?
புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிபுத்திரன், சக்திகனல்,இரவீந்திரன்,ஞானி,பா,செயப்பிரகாசம்,பிரபஞ்சன்,பாலா, கோ.ராஜாராம்.

124. ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகின்றன எனப்பாடியவர் யார் ?
வல்லிகண்ணன்

125. உச்சிமலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்குது ஒற்றுமையில்லா மனித குலம் உயர்வு தாழ்வு வளர்க்குது எனப்பாடியவர் யார் ?
பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்

126. கண்ணதாசன் படைத்த நெடுங்கவிதை நூல்கள் எவை ?
ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லகுடி, மகாகாவியம், இயேசுகாவியம்

127. கம்பர் - அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாக கொண்டு கண்ணதாசன் படைத்த நாடகத்தின் பெயர் என்ன ?
இராசதண்டனை

128. கண்ணதாசன் படைத்த புதினங்களின் பெயர் என்ன ?
ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி, வேலங்குடி திருவிழா

129. கண்ணதாசனின் சிறந்த வரலாற்று புதினம் எது ?
சேரமான் காதலி

130. சாகித்திய அகாதெமி விருது பெற்ற கண்ணதாசனின் புதினம் எது ?
சேரமான் காதலி

131. கண்ணதாசன் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் எவை ?
தென்றல், முல்லை. கண்ணதாசன், தமிழ் மலர்.

132. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்றவர் யார் ?
கண்ணதாசன்.

133. சாகித்திய அகாதெமி யாருடையது ?
நடுவண அரசு

134. இரு எழுத்து தனித்தும் பல எழுத்துக்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது .... ஆகும்.
சொல்

135. சொல் ஐ குறிக்கும் வேறு பெயர்கள் என்ன ?
பதம், கிழவி, மொழி

136. பதம் எத்தனை வகைப்படும்?
2

137. மரம், நாய், நீர் ஆகியவை எதற்கு உதாரணம் ?
பெயர்ப் பகாபதம்

138. தில்,மன்,பிற ஆகியவை எதற்கு உதாரணம் ?
இடைப் பகாபதம்

139. வினை பகாபதத்திற்கு உதாரணம் தருக
உண், காண், எடு

140. உரிப்பகாபததிற்கு உதாரணம் தருக
சால, நனி, கடி, உறு

141. இடைசொல்லும், உரிச்சொல்லும் .... ஆக இருக்கும்
பகாபதங்களாக

142. பகுதி விகுதி இடைநிலை எனப்பிரிக்கப்படுவது ... எனப்படும்
பகுபதம்

143. பெயர் பகுபததிற்கு அடியாக இருப்பது எது ?
பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்

144. பகுபத உறுப்புகள் யாவை ?
பகுதி, விகுதி,இடைநிலை, சந்தி,சாரியை, விகாரம்.

145. பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தருவது .. ஆகும்
பகுதி

146. பகுபதத்தில் இறுதியில் நின்று பொருள் தருவது .. ஆகும்
விகுதி

147. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது ...
இடைநிலை

148. நிகழ்கால இடைநிலைகள் யாவை ?
கிறு,கின்று, ஆநின்று

149. **இறந்தகால இடைநிலைகள் யாவை ?**
த்,ட்,ற்,ன்

150. **எதிர்கால இடைநிலைகள் யாவை ?**
ப்,வ்

151. **எதிர்மறை இடைநிலைகள் யாவை ?**
இல்,ஆல்,ஆ

152. **பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது ...**
சந்தி

153. **பெயர்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது ...**
சாரியை

154. **சொற்களிடையில் ஏற்படும் மாறுபாடு ... ஆகும்**
விகாரம்

155. **சாரியை தருக**
**உண்டனன் - உண்+ட்+**அன்+**அன்**

156. **சாரியைகள் யாவை ?**
அன்,ஆன்,இன்,அல்,அற்று,இற்று,அத்து,அம்

157. **தன்னோடு தொடர்புடைய ஒன்றைகூறி பொருளுக்கு பெயராகு வருவது**
ஆகுபெயர்

158. **ஆகுபெயரின் எத்தனை வகைப்படும்?**
16

159. **ஒன்று பெற்றார் ஒளி மயம். இதில் ஒன்று என்பது... ஆகுபெயர்**
எண்ணல் அளவையாகுபெயர்

160. **ஐந்து கிலோ என்ன விலை? இதில் கிலோ என்பது... ஆகுபெயர்**
எடுத்தல் அளவையாகுபெயர்

161. **4 லிட்டர் தேவை. இதில் லிட்டர் என்பது... ஆகுபெயர்**
முகத்தல் அளவையாகுபெயர்

162. மூன்று மீட்டர் கொடு. இதில் மீட்டர் என்பது... ஆகுபெயர்
நீட்டல் அளவையாகுபெயர்

163. அளவுத்தொடர்களுக்கு எடுத்துக்காட்டு தருக
ஒன்று கொடு, நாலுகிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் கொடு.

164. பொருள்கோள் எத்தனை வகைப்படும் ?
8

165. ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும் என்பன ..... ஆகா
ஆகுபெயர்

166. ஒரு செய்யுளின் சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறை... ஆகும்
பொருள்கோள்

167. "பொறிவாயில் ஐந்தவித்தான்.. " எனும் குறளில் ....... பொருள்கோள் அமைந்துள்ளது.
ஆற்றுநீர்ப் பொருள்கோள்

168. "சுரையாழ அம்மி மிதப்ப ... " எனும் பாடலில் ....... பொருள்கோள் அமைந்துள்ளது.
மொழிமாற்றுப் பொருள்கோள்

169. சொற்களை முறை மாற்றாமல் அப்படியே பொருள் கொள்வது .. ஆகும்
ஆற்றுநீர்ப் பொருள்கோள்

170. சொற்களை முன்பின்னாக மாற்றி பொருள்கொள்வது ... ஆகும்
மொழிமாற்றுப் பொருள்கோள்

171. செய்யுளின் இருக்கிற சொற்களை முறைமாற்றாமல் பொருள் கொள்வது ... ஆகும்
நிரல்நிறைப் பொருள்கோள்

172. "அன்பும் அறனும் உடைத்தாயின்.. " எனும் குறளில்....... பொருள்கோள் அமைந்துள்ளது.
நிரல்நிறைப் பொருள்கோள்

173. "இருட்பகை இரவி இருளேனத் தம்மையும் கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக் கயான் மார்பிற் புடைத்துக் கலங்கி மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம் பதறி திசையிலும் சிதறியோடுதலும்.. " எனும் பாடலில் பயின்று வந்த அணி... ?
தற்குறிப்பேற்ற அணி

174. வைக்கோலும் யானையும் ஒன்று எனப்பாடியவர் யார் ?
காளமேகப்புலவர்

175. நிலமகளே வெல்வாள் எனும் கவிதையினை எழுதியவர் யார்?
முடியரசன் (மனிதனைத் தேடுகின்றேன்)

176. வேம் என்பதன் பொருள் என்ன?
வேகின்றது

177. கடம் என்பதன் பொருள் என்ன?
கடன்பட்டு

178. திராவிடம் பேசிய மொழியே திராவிட மொழி. திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு நெனும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் முதலிய சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துல்லது எனக் கூறியவர் யார்? எந்த நூலில் கூறியுள்ளார்?
கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.

179. திராவிடம் என்னும் சொல்லை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் யார்?
கால்டுவெல்

180. கொம்பினை யொத்த மடப்பிடி யோடும் கூடியிங் கேய்தி விருந்து களிக்க நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான் நல்லதோர் நுந்தை - இது யாருடைய கூற்று?
மன்னன் திருதராட்டிரன்

181. பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப் பாவியென் துணைபுரியும் பான்மை யென்னே ! எனப் பாடியவர் யார்?
பாரதியார்

182. பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப் பாவியென் துணைபுரியும் பான்மை யென்னே ! - இது யாருடைய கூற்று ?
விதுரர்

183. செந்தமிழ்ச் சொல்லேடுத்து இசை தொடுப்பேன் - வண்ணச் சந்தத்திலே கவிதைச் சரம்தொடுப்பேன் எனப் பாடியவர் யார்? இக்கவிதையை யார் மீது கொண்ட பற்றினால் பாடியுள்ளார்?
கண்ணதாசன், தமிழ்த்தாய்

184. கதிர்வெடித்து பிழம்புவிழக் கடல் கொதித்துச் சூடேற்ற முதுமைமிகு நிலப்பரப்பில் முதற்பரப்பு தோன்றிவிட நதிவருமுன் மணல்வருமுன் நலம் வளர்த்த தமிழணங்கே ! எனப் பாடியவர் யார்?
கண்ணதாசன் (தமிழ்த்தாயின் பழமை)

185. வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும் வந்த துபம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவ தில்லை எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இருதி வரைக்கும் அமைதி இருக்கும் எனப் பாடியவர் யார்?
கண்ணதாசன் (நம்பிக்கை நமக்கு உரம், அறிவுக்கு வழித்தடம்)

186. வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை - நீங்கி வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை எனப் பாடியவர் யார்?
கண்ணதாசன் (சுரண்டல், வறுமை நீங்கி சமத்துவம் ஓங்க பொதுமை உணர்வே ஏற்றது)

187. வாரிக் களத்தடிக்கும் வந்த பின்பு கோட்டை புகும் போரில் சிறந்து பொலிவாகும் - சீருற்ற செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில் வைக்கோலும் மால்யானை யாம் - இவ்வரிகளைப் பாடியவர் யார்?
காளமேகப் புலவர்

188. ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக்குஞ்சே - கரை ஓரத்தில் மேயாதே

கெண்டைக் குஞ்சே தூண்டில் காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத் துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே எனப் பாடியவர் யார்?
மக்கள் கவிஞர் பட்டுகோட்டைக் கல்யாணசுந்தரம்

189. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் முதன்முதலாக எந்த திரைப்படத்திற்கு பாடல் எழுதினார் ?
படித்த பெண் (1954)

190. மக்கள் கவிஞர் யாரிடம் பாடம் கற்றார்?
பாவேந்தர் பாரதிதாசன்

191. மக்கள் கவிஞரை "நீ மீண்டும் தோன்றிய பாரதியடா" எனப் பாராட்டியவர் யார்?
தோழர் ஜீவானந்தம்

192. தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது ஆனாலும் மக்கள் வயிரு காயுது எனப் பாடியவர் யார்?
மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

193. வசனக்கவிதை இயற்றியவர் யார்?
பாரதியார்

194. நாலு வேதம் ஆம் நவைஇல் ஆர்கலி வேலி அன்னவன் மலையின்மேல் உளான் சூலிதன் அருள் துறையில் முற்றினான் வாலி என்று உளான் வரம்பில் ஆற்றலான் - இவ்வடிகளை இயற்றியவர் யார்? நூலின் பெயர் என்ன?
கம்பர் , கம்பராமாயணம்.

195. மாறியுள்ள சொற்களை வரிசைப்படுத்துக
கிழக்கு திசைக்கு பெயர் உதிக்கின்ற ஞாயிறு
ஞாயிறு உதிக்கின்ற திசைக்குப் பெயர் கிழக்கு

பிறப்பிடம் துன்பத்துக்கும் சோம்பலே தீமைக்கும்
தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம் சோம்பலே

பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும்
போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

196. வினைமுற்று தருக

துள்ளி ஓடிய புள்ளிமான்
புள்ளிமான் துள்ளி ஓடியது

மிகவும் இனித்த பழம்
பழம் மிகவும் இனித்தது

பாடம் படித்த வைகறை செல்வி
செல்வி வைகறையில் பாடல் படித்தாள்

நீதி தவறாத மன்னன்
மன்னன் நீதி தவறாதவன்

நேற்று பெய்த மழை
நேற்று மழை பெய்தது

197. வாஷிங்டன் யார் ?
அமெரிக்க குடியரசு தலைவர்

198. பொருள் தருக
வீறு
வலிமை

சதுரங்கசேனை
நால்வகைப்படை

மதுரமொழி
இனிய மொழி

குசலங்கள் பேசி
நலன் கேட்டு

அரம்பையர்
தேவமகளிர்

ஞானம்
அறிவு

புன்மை
நெறி பிறழ்ந்த செயல்கள்

கோலமுறு
அழகுமிக்க

செறிந்து
அடர்ந்து

கா
காடு

குலவு
விளங்கும்

ஞாலம்
உலகம்

பண்ணவர்
தேவர்

அடவி
காடு

தடந்தோள்
வலிய தோள்

மணிநகர்
அழகிய நகரம்

மருங்கு
பக்கம்

எம்பி
என் தம்பி

மடப்பிடி
பாஞ்சாலி (பெண்)
களிக்க
மகிழ

**கோமான்**
அரசன் (திருதராட்டிரன்)

**நுந்தை**
நும் தந்தை

**கண்ணோட்டம்**
இரக்கம் கொள்ளுதல்

**எண் வனப்பு**
ஆராய்ச்சிக்கு அழகு

**கிளர்வேந்தம்**
புகழுக்குரிய அரசன்

**வாட்டான்**
வருத்தமாட்டான்

199. **இலக்கண குறிப்பு தருக**
**மாநகர்**
உரிசொற்றொடர்

**கண்ணோட்டம்**
தொழிற்பெயர்கள்

**செல்லாமை**
தொழிற்பெயர்கள்

**உரைத்தல்**
தொழிற்பெயர்கள்

**என்றக்**
தொழிற்பெயர்கள்

**கேட்டார்**
வினையாலணையும் பெயர்கள்

வாட்டான்
வினையாலணையும் பெயர்கள்

சார்ந்தவர்
வினையாலணையும் பெயர்

நுந்தை
நும் தந்தை என்பதன் மரூஉ

அடவிமலையாறு
உம்மைதொகை

கடந்து
வினையெச்சம்

தடந்தோள்
உரிச்சொற்றொடர்

பாலடையும் நறுநெய்யும் தேனும்
எண்ணும்மை

நீலமுடி
பண்புத்தொகை

நன்செய்
பண்புத்தொகை

புன்செய்
பண்புத்தொகை

பாய்ந்து
வினையெச்சம்

செறிந்து
வினையெச்சம்
ஞாலமெலாம்
எல்லாம் என்பதன் தொகுத்தல் விகாரம்

மக்களெலாம்
எல்லாம் என்பதன் தொகுத்தல் விகாரம்

காத்தல்
தொழிற்பெயர்

தொல்லுலகு
பண்புத்தொகை

தாளமும் மேளமும்
எண்ணும்மை

பதமலர்
உருவகம்

200. பிரித்து கூறுக
பொன்னன்
பொன்+ன்+ன்

ஊரன்
ஊர்+அன்

ஆதிரையான்
ஆதிரை+ய்+ஆன்

கண்ணன்
கண்+ண்+அன்

கரியன்
கருமை+அன்

நடிகன்
நடி+க்+அன்

செய்தான்
செய்+த்+ஆன்

201. பகுதி தருக
படித்தான் - படி

ஓடினான் - ஓடு
வந்தான் - வா

202. விகுதி தருக
நடந்தான் (ஆண்பால் விகுதி)
ஆன்

நடந்தாள் (பெண்பால் விகுதி)
ஆள்

நடந்தனர் (பலர்பால் விகுதி)
அர்

நடந்தது (ஒன்றன்பால் விகுதி)
அது

நடந்தன (பலவின்பால் விகுதி)
அன

203. இடைநிலை தருக
உண்கிறான் - கிறு
உண்கின்றான் - கிண்று
உண்ணாநின்றான் - ஆநின்று
பார்த்தான் - பார்+த்+த்+ஆன்
உண்டான் - உண்+ட்+ஆன்
வென்றான் - வெல்(ன்)+ற்+ஆன்
பாடினான் - பாடு+இன்+ஆன்
உண்பான் - உண்+ப்+ஆன்
வருவான் - வா(வரு)+வ்+ஆன்
உண்டிலன் - உண்+ட்+இல்+அன்
காணலன் - காண்+அல்+அன்
பாரான் - பார்+ஆ+ஆன்

204. சந்தி தருக
பார்க்கிறான் - பார்+க்+கிறு+ஆன்
படித்தான் - பார்+ஆ+ஆன்

205. வேர்ச்சொல் காண்க
போவேன் - போ

கற்பேன் - கல்
பிளிறும் - பிளிறு
அடக்கினார் - அடக்கு
பெற்றது - பெறு

206. தமிழாக்கம் தருக

Crying child will get the milk
அழுத பிள்ளை பால் குடிக்கும்

Make hay while the sun shines
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

The childhood shows the man
விளையும் பயிர் முளையிலேயே தெரியும்

All is well that ends well
முதற்கோணல் முற்றிலும் கோணல்

A good marksman may miss
ஆனைக்கும் அடி சறுக்கும்

207. திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் - வருந் தீமையும் பொய்யும் களைவாய் எனப் பாடியவர் யார்?
பெருஞ்சித்திரனார்

208. தாக்குறும் துன்பம் யாவும் - இசைத் தமிழினில் மாய்ந்து போகும் ...அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ அன்றாடச் செய்தி படிப்பாய் என எழுதியவர் யார்?
பெருஞ்சித்திரனார்

209. பெருஞ்சித்திரனாரின் சிறப்பு பட்டம் என்ன?
பாவலரேறு

210. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் என்ன?
துரை.மாணிக்கம்

211. பெருஞ்சித்திரனாரின் காலம் ?
10/03/1933 - 10/06/1995

212. பெருஞ்சித்திரனாரின் படைப்புகள் யாவை ?
கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி. பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம்.

213. பெருஞ்சித்திரனார் தமிழர்களிடையே தமிழுணர்வை வளர்க்க உதவிய இதழ்கள் எவை?
தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்.

214. ஓய்வும் பயனும் எனும் கவிதை எப்பகுதியில் இடம்பெற்றுள்ளது ?
பள்ளிப்பறவைகள் - குழந்தைப் பாடல் தொகுப்பின் 2ம் பகுதி

215. பள்ளிப்பறவையின் பகுதிகள் எவை?
குங்குகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை

216. தருமிக்கு பொற்கிழி அளித்த படலம் திருவிளையாடற்புராணத்தின் எப்பகுதியில் அமைந்துள்ளது?
திருவாலவாய்க் காண்டம்

217. தென்னாடுடையவர் யார்?
சிவபெருமான்

218. திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்கள் இயற்றப்பட்டதன் முக்கிய நோக்கம் என்ன?
தமிழ்ப்புலவர்களுக்கும் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிபடுத்த.

219. இறைவனிடம் புலவர்கள் சங்கப்பலகை பெற்றதன் நோக்கம் என்ன?
தம்புலமைத் திறத்தை அறிய

220. தலைமைப்புலவராய் அமர்ந்தவர் யார்?
சிவபெருமான்

221. சிவபெருமான் தலைமைப்புலவராய் வந்ததன் நோக்கம் என்ன?
சங்கப்புலவர்களின் கருத்து போரை தீர்க்க

222. சங்கபுலவர்களின் எண்ணிக்கை என்ன?
49 (48 + 1 (சிவபெருமான்))

223. வங்கிய சூடாமணிப்பாண்டியனின் தந்தை யார்?
வங்கிய சேகர பாண்டியன்

224. சண்பக நந்தவனத்தை ஏற்படுத்தியவர் யார்?
வங்கிய சூடாமணிப்பாண்டியன்

225. சண்பக பாண்டியன் எனப்பட்டவர் யார்?
வங்கிய சூடாமணிப்பாண்டியன்

226. உய்ய வோர்கவி யுரைத்தே நக்கருள் செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான் - இது யாருடையக் கூற்று ?
தருமி

227. பாண்டியர் குலதெய்வம் யார்?
சொக்கநாதர் (அ) சுந்தரபாண்டியன்

228. மையுண்ட கண்டன் யார்?
சிவபெருமான்

229. "யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார்: - இது யாருடையக் கூற்று ?
சிவபெருமான்

230. சிவபெருமான் இயற்றிய பாடல் நக்கீரன் கூறிய குற்றம் என்ன?
"சொல் குற்றம் இல்லை; பொருள் குற்றம் உள்ளது"

231. பொன்னிறத்தன்னை சடையார் யார்?
சிவபெருமான்

232. பொற்குற்ற வேணி அண்ணல் யார்?
சிவபெருமான்

233. "புனைமலர்ச் சார்பால் அன்றி அற்குற்ற குழற்கு நாற்றம் இல்லையே" என்றவர் யார்?
நக்கீரன்

234. திருக்காளத்தியில் கோவில் கொண்டவர் யார்?
சிவபெருமான்

235. சிவபெருமான் சடையில் அணிந்தவை எவை?
பாம்பு மற்றும் கங்கை

236. சிவபெருமானின் இடபாகத்தில் உறைபவர் யார்?
உமையன்னை

237. "பரவிநீ வழிபட்டு ஏத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி அரவுநீர்ச் சடையார் பாகத்து அமர்ந்தஞா நப்பூங் கோதை இரவினீர்ங் குழலும் அற்றோ - இது யாருடையக் கூற்று ?
சிவபெருமான்

238. என்னா வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் - இது யாருடையக் கூற்று
நக்கீரர்

239. விளைவு நோக்காதவர் யார்?
நக்கீரர்

240. கற்றைவார் சடையார் யார்?
சிவபெருமான்

241. உடல் முழுவதும் கண்ணுடையவர் யார்?
இந்திரன்

242. "உம்பரார் பதிபோல் ஆகம் முற்றுநீர் கண்ணா நாலும் மொழிந்தநும் பாடல் குற்றம் குற்றமே யென்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்" - இது யாருடையக் கூற்று ?
நக்கீரன்

243. உம்பரார் பதி யார்?
தேவர் தலைவன் (இந்திரன்)

244. பிறை நிலவைத் தலையில் சூடியவர் யார்?
சிவபெருமான்

245. சிவபெருமானின் நெற்றிகண்ணிலிருந்து வெப்பம் தாளாமல் நக்கீரன் எங்கு வீழ்ந்தார்?

பொற்றாமரைக்குளம்

246. திருவிளையாடற்புராணத்தை இயற்றியவர் யார்?
பரஞ்சோதி முனிவர்

247. பரஞ்சோதி முனிவர் - பிறந்த இடம் ?
நாகை மாவட்டம் - திருமறைக்காடு (வேதாரண்யம்)

248. பரஞ்சோதி முனிவரின் தந்தை யார்?
மீனாட்சி சுந்தர தேசிகர்

249. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணத்தை எங்கு அரங்கேற்றினார் ?
மதுரை சிவபெருமான் கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில்

250. பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்கள் எவை?
திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி

251. திருவிளையாடற்புராணத்தின் படலங்கள்:
மதுரைக் காண்டம்
18 படலம்

கூடற்காண்டம்
30 படலம்

திருவாலவாய்க்காண்டம்
16 படலம்

252. திருவிளையாடற்புராணத்தில் உள்ள உட்பிரிவின் (படலம்) எண்ணிக்கை ?
63

253. திருவிளையாடற்புராணத்தின் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ?
3363 விருத்தப்பாக்கள்

254. திருவிளையாடற்புராணத்திற்கு உரை எழுதியவர் யார்?
ந.மு.வேங்கடசாமி நாட்டார்

255. திருவிளையாடல்களின் எண்ணிக்கை என்ன?
64

256. இறைவன் தருமிக்கு வழங்கிய பாடல் எந்நூலில் அமைந்துள்ளது?
குறுந்தொகை – 2

257. வருவாய் மிகுதியாய் கொண்ட வாணிகம் எது?
அயல்நாட்டு வாணிகம்

258. தரை வாணிபத்தை விட மிகுந்த பொருளைத் தருவது எது?
நீர் வழியாக செய்யும் வாணிகம்

259. திரைகடல் ஓடி திரவியம் தேடு என்றவர் யார்?
ஔவையார்

260. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றவர் யார்?
கணியன் பூங்குன்றன்

261. தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி ...... ல் குறிக்கப்பட்டுள்ளது.
தொல்காப்பியம்

262. முந்நீர் வழக்கம் என்றால் என்ன?
தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி

263. பழந்தமிழர்கள் தங்களது கடமையென கருதியது .....
பொருளீட்டுதல்

264. பழந்தமிழரின் பொருளீட்டுதலை விளக்குவது எது ?
தொல்காப்பியம் பொருளதிகாரம் – பொருள்வயிற்பிரிவு

265. பொருள்வயிற்பிரிவின் வகைகள் என்ன?
காலில் பிரிவு (தரைவழிப் பிரிவு)
கலத்தில் பிரிவு (நீர்வழிப் பிரிதல்)

266. மேற்காசிய நாடுகளில் விற்கப்பட்ட தமிழரின் பொருட்கள் எவை?
ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு.

267. தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற பிற நாட்டவரின் உள்ளம் கவரும் பொருட்கள் எவை?
முத்து, பவளம், ஆரம், அகில், வெண்துகில்.

268. யவனர்கள் யார்?
கிரேக்கர்கள், உரோமானியர்கள் (பழந்தமிழரால் அழைக்கப்பட்டன)

269. கடலில் உள்ள கப்பலை மருத நில அரசனது கோட்டையாக உவமிக்கப்பட்டது எந்த நூலில் ?
புறநானூறு

270. கடலைக் குறிக்கும் சொற்கள் எவை?
ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவி, புணரி

271. மரக்கலத்தை குறிக்கும் சொற்கள் எவை?
கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம். மிதவை, பஃறி, ஓடம்
(ஒவ்வொன்றும் ஒவ்விரு வகையான கலத்தை குறிக்கும்)

272. நாவாய் என்றால் என்ன?
கடலில் செல்லும் பெரிய கலம்

273. புகார் நகர் கப்பல்கள் அசைவது யானைக்கு ஒப்பாய் கூறப்பட்ட செய்தி காணப்படும் நூல் எது?
பட்டிணப்பாலை

274. காற்றின் துணை கொண்டு இயங்குவது ....
பெரிய நாவாய் (பாய்மரக் கப்பல்)

275. காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தியவர்கள் யார்?
கரிகாலனின் முன்னோர்

276. காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தியவர்களைப் பற்றி செய்தி காணப்படும் நூல் எது ?

புறநானூறு

277. துறைமுக நகரங்கள் எவை?
காவிரிபூம்பட்டிணம், முசிறி, கொற்கை

278. சேர மன்னர்களுக்குரிய துறைமுகம் எது?
முசிறி

279. எந்த ஆற்றில் யவனர்களின் கப்பல் வந்து நின்றது ? செய்தி காணப்படும் நூல் எது?
சுள்ளி, அகநானூறு

280. கொற்கை யாருடையத் துறைமுகம்?
பாண்டியர்

281. முத்துக்குளித்தல் எந்த துறைமுகத்தில் சிறப்பாக நடைபெற்றது ?
கொற்கை

282. முத்துகுளித்தலைப்பற்றி யாருடைய குறிப்புகள் கூறுகின்றது ?
வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ

283. கொற்கை துறைமுகத்தில் ஏற்றுமதி பொருட்களில் முதலிடம் பிடித்தது எது?
முத்து

284. விளைந்து முதிர்ந்த விழுமுத்து எனக் கூறும் நூல் எது?
மதுரைக்காஞ்சி

285. கடற்பரையை அடுத்து இருக்கும் ஊர்கள் எவை?
பட்டினம், பாக்கம்

286. பழந்தமிழரின் வாணிகப் பொருள்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படும் நூல் எது?
பட்டிணப்பாலை, மதுரைக்காஞ்சி

287. ஏற்றுமதியான பொருட்கள் எவை?

இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி

288. தமிழகப் பொருட்கள் விற்கப்பட்ட இடம் ?
சீனம்

289. கரும்பு யாரால் கொண்டு வரப்பட்டது?
அதியமானின் முன்னோர்

290. மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் எனக் கூறியவர் யார்?
பாரதியார்

291. கடல் கடந்த தமிழ்
அரிசி
ஒரைஸா

கரோரா
கவூர்

கபிரில்
காவிரி

கொமாரி
குமரி

திண்டிஸ்
தொண்டி

மதோரா
மதுரை

முசிரில்
முசிறி

292. ஹெலன் கெல்லர் எங்கு பயின்றார் ?
பெர்கின்ஸ் பள்ளி (அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியுடன்)

293. ஹோரஸ்மான் காதுகேளாதோர் பள்ளி எங்குள்ளது?

பாஸ்டன் (அமெரிக்கா)

294. ரைட் ஹூமாசன் பள்ளி எங்குள்ளது?
நியூயார்க்

295. ஹெலம் எங்கு இளங்கலை பயின்றார்?
கேம்பிரிட்ஜ் ரெட் கிளிஃப் கல்லூரி

296. வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்றுபோனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது" என்றவர் யார்?
ஹெலன் கெல்லர்

297. ஹெலன் கெல்லரின் மொழி பெயர்ப்பாளர் யார்?
பாலி தாம்சன்

298. ஹெலன் கெல்லரின் ஆசிரியர் அன்னி இரந்த ஆண்டு?
1930

299. ஹெலன் கெல்லர் - காலம் ?
27/06/1880 - 01/06/1968

300. உலகின் எட்டாம் அதிசயம் ?
ஹெலன் கெல்லர்

301. பார்வையற்றோருக்கான எழுத்து முறையை உருவாக்கியவர் யார்?
பிரேய்லி

302. யாப்பு என்றால் என்ன?
யாக்கப்படுவது (கட்டப்படுவது), செய்யுள்

303. செய்யுள் உறுப்புகள் எவை?
எழுத்து அசை சீர் தளை அடி தொடை

304. எழுத்தின் வகைகள் என்ன?
குறில் ,நெடில், மெய்(ஒற்று), ஆய்தம்

305. எழுத்து தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் அசைந்து (பிரிந்து

நிற்பது ... ஆகும்
அசை

306. அசையின் வகைகள் என்ன?
நேரசை, நிரையசை

307. குறில் தனித்தும் குறில் ஒற்றெடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றெடுத்தும் வருவது ....?
நேரசை (க, கல், கா, கால்)

308. குறில் இணைந்தும் குறில் இணை ஒற்றும், குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்தும் ஒற்றும் வருவது .....
நிரையசை (பட, படம், படா, படாம்)

309. ஓரசைச்சீரின் வகைகள் என்ன?
நாள் (நேர்), மலர் (நிரை, காசு (நேர்பு), பிறப்பு (நிரைபு).

310. சீர் என்றால் என்ன?
அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி அடிக்கு உறுப்பாக அமைவது.

311. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர் தற்று - இக்குறட்பாவில் பயின்று வந்த அணி என்ன?
இல்பொருள் உவமையணி

312. உலகில் இயல்பாக இல்லாத பொருளை இவாறு உவமையாக்கிக் கூறுவது ....
இல்பொருள் உவமையணி

313. புலவர் தாம் கருதிய பொருளை நிலைநாட்டா உலகம் அறிந்த வேறொரு பொருளைச் சான்றுக் காட்டி கூறும்போது, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை .........என்பர்
வேற்றுப்பொருள் வைப்பணி

314. உரைமுடிவு காணான் இளையோன் என்ற நரைமுது மக்கள் உவப்ப –

நரைமுடித்து சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை கல்லாமல் பாகம் படும் - இப்பாடலில் பயின்று வந்த அணி ?
வேற்றுபொருள் வைப்பணி.

315. மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தை ஒருசிறி தெனினும் கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும்நாம் சகித்திட மாட்டேன் - இப்பாடலைப் பாடியவர் யார்?
வள்ளலார்

316. மொழிபெயர்ப்பு தருக :
In a fiddler's house all are dancers
கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்

No man can flay a stone
கல்லிலே நார் உரிக்க முடியுமா?

Difficulties give way to diligence
கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்

Command your man and do it yourself
வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்

Charity is a double blessing
தருமம் தலை காக்கும்.

317. பொருள் தருக
விபுதர்
புலவர்

தூங்கிய
தொங்கிய

பொற்கிழி
பொன்முடிப்பு

நம்பி
தருமி
புறம்பு

வெளியில்

அளக்கில் கேள்வியார்
அளவற்ற நூலறிவினர்

சிரம் முலக்கி
தலையசைத்து

மீனவன்
மீன்கொடியை உடைய பாண்டியன்

பையுள்
வருத்தம்

பனவம்
அந்தணன்

கண்டம்
கழுத்து

வழுவு பாடல்
குற்றமுள்ள பாடல்

ஆர்அவை
(புலவர்கள்) நிறைந்த அவை

கிளத்தினேன்
சொன்னேன்

சீரணி
புகழ் வாய்ந்த

வையை நாடவன்
பாண்டியன்

உய்ய
பிழைக்க
இரந்து செப்பினான்

பணிந்து வேண்டினான்

இன்னல்
துன்பம்

நல்கினார்
அளித்தார்

இறஞ்சி
பணிந்து

வேணி
செஞ்சடை

ஓரான்
உணரான்

அற்குற்ற
இருளையொத்த

நாற்றம்
நறுமனம்

குழல்
கூந்தல்

அல்கு
இடவு

ஏத்தும்
வணங்கும்

அரவுநீர்ச்சடையார்
சிவபெருமான்

ஞானப்பூங்கோதை
உமையம்மை
வெருவிலான்

அக்கமற்றம் நக்கீரன்

சலம்
மன உறுதி

நுதல்விழி
நெற்றிக்கண்

பொற்பங்கயத்தடம்
பொற்றாமரைக்குளம்

நாவலன்
புலவர்

கரந்தான்
மறைந்தான்

318. இலக்கண குறிப்பு தருக
உரைத்து
வினையெச்சம்

இரந்து
வினையெச்சம்

சொல்லி
வினையெச்சங்கள்

இறைஞ்சி
வினையெச்சங்கள்

விளக்கி
வினையெச்சம்

சிறந்து
வினையெச்சம்

மகிழ்ச்சி

தொழிற்பெயர்

ஆய்ந்த பொற்கிழி
பெயரெச்சம்

நோக்கி
வினையெச்சம்

கிளத்திேனேண்
தன்மை ஒருமை வினைமுற்று

தேராக் கீரன்
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

புனைமலர்
வினைத்தொகை

பற்றுவான்
வினையாலணையும் பெயர்

அஞ்சான்
வினையாலணையும் பெயர்

குற்றம்
தொழிற்பெயர்

தேய்ந்த
பெயரெச்சங்கள்

பாய்ந்த
பெயரெச்சங்கள்

ஆய்ந்த
பெயரெச்சங்கள்

காய்ந்த
பெயரெச்சங்கள்
விழுந்து

வினையெச்சங்கள்

செந்தீ
பண்புத்தொகைகள்

வெம்மை
பண்புத்தொகைகள்

319. திருக்குறளில் "உடமை" என முடியும் அதிகாரங்கள் எத்தனை ?
10

320. திருக்குறளுக்கு பெரிதும் தொடர்புடைய எண்?
7

321. "கற்றவர் முந்தாம் கற்ற கல்வியைக் கூறல் இன்பம்" - இவ்வரிகளைப் பாடியவர் யார்?
சுரதா

322. உவமைக்கவிஞர் யார்?
சுரதா

323. உவமைக்கவிஞரின் இயற்பெயர் என்ன ?
இராசகோபாலன்

324. உவமைக்கவிஞர் பிறந்த இடம் எது?
பழையனூர் (திருவாரூர் மாவட்டம்)

325. "சுரதா" எனும் பெயரின் பொருள் என்ன ?
சுப்புரத்தினதாசன்

326. சுரதா இயற்றிய கவிதை நூல்கள் எவை?
தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்.

327. தமிழக அரசின் வளர்ச்சிதுறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு பெற்ற சுரதாவின் படைப்பு எது ?
தேன்மழை

328. சுரதாவிற்கு கலைமாமணி விருது யாரால் வழங்கபட்டது?

தமிழக இயலிசை நாடக மன்றம்

329. சுரதாவிற்கு தமிழக அரசு வழங்கிய சிறப்பு என்ன?
பாவேந்தர் விருது

330. தேன்மழை நூலின் பகுதிகள் எண்ணிக்கை என்ன?
16 பகுதிகள் (இயற்கை எழில் - ஆராய்ச்சி)

331. "கற்றவர் முந்தாம் கற்ற கல்வியைக் கூறல் இன்பம்" எனும் வரிகள் இடம்பெற்ற நூல், மற்றும் பகுதி என்ன?
தேன்மழை நூலில் தேன் துளிகள் பகுதி

332. பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி, குமாரசாமி ஆகியோர் காமராசர் உதவியுடன் முதலமைச்சர்களாய் பதவியேற்ற ஆண்டுகள்?
பிரகாசம் - 1945, ஓமந்தூர் ராமசாமி 1947, குமாரசாமி 1949

333. காமராசர் முதலமைச்சராக இருந்த போது எத்தனையாவது ஐந்தாண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டன?
2,3

334. காமராசர் முதலமைச்சராக இருந்த போது பெரிய தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்ட இடங்கள் எது?
கிண்டி, அம்பத்தூர், இராணிப்பெட்டை.

335. பொருத்துக
நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை - நெய்வேலி
இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை - உதகை
அறுவைச் சிகிச்சை கருவித் தொழிற்சாலை - கிண்டி
தொடர்வண்டிப் பெட்டி தொழிற்சாலை - பெரம்பூர்
காகிதத் தொழிற்சாலை - மேட்டூர்

336. நில உச்ச வரம்பு –
30 ஏக்கர்

337. புவனேசுவரில் காங்கிரஸ் கட்சி மாநாடு நடந்த ஆண்டு எது?
1963

338. காமராசரின் பிறந்த நாள் –

ஜூலை - 15 – 1903

339. கல்வி வளர்ச்சி நாள்?
ஜூலை - 15 – 1903 (காமராசரின் பிறந்த நாள்)

340. தொழிற்பெயரை குறிக்க வரும் விகுதிகள் யாவை?
தல், அல், அம், ஐ,கை,வை,கு,பு,உ,தி,சி,வி,உள்,காடு, பாடு,அரவு, ஆனை, மை,து,அல்

341. தொழிற்பெயரின் வகைகள் என்ன?
முதனிலை தொழிற்பெயர்
முதனிலை திரிந்த தொழிற்பெயர்

342. தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவது ...
முதனிலை தொழிற்பெயர்

343. தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது ....
முதனிலை திரிந்த தொழிற்பெயர்

344. பேறு, கேடு என்பது ...
முதனிலை திரிந்த தொழிற்பெயர்

345. அடி என்பது ...
முதனிலை தொழிற்பெயர்

346. வினையைக்குறிக்காமல் வினைசெய்தவரி குறிப்பது ...
வினையாலணையும் பெயர்

347. பண்புப்பெயருக்கு அடிப்படையாக வருவது ..?
நிறம், சுவை, அளவு, வடிவம்.

348. பண்புப்பெயர் விகுதிகள் யாவை?
மை,ஐ,சி,பு,உ,கு,றி,அம்,அர்,பம்,து

349. இலக்கணமுறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் ... ஆகும்.

வழாநிலை

350. வாழாநிலைத் தருக
செல்வி பாடினாள் -
திணை வழாநிலை

நாய் ஓடியது -
பால் வழாநிலை

நீ வருவாய் -
இட வழாநிலை

தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் -
வினா வழாநிலை

நாளை வருவேன் -
கால வழாநிலை

தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என
விடையளித்தல் -
விடை வழாநிலை

351. இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் .. ஆகும்.
வழு

352. வழுவின் வகைகள் யாவை ?
திணைவழு,பால்வழு,இடவழு,காலவழு,வினாவழு,விடைவழு,
மரபுவழு.

353. வழு கூறுக :
என் மாமா வந்தது
திணைவழு

நாங்கள் வந்தார்கள்
இடவழு

கண்ணகி வந்தான்
பால்வ

கரிகாலன் நாளை வந்தான்
காலவழு

முட்டையிட்டது சேவலா பெட்டையா ? -
வினாவழு

நாளை பள்ளி திறக்கப்படுமா ? எனும் வினாவுக்கு என் அத்தை உடல் நலமில்லை எனக்கூறுவது -
விடைவழு

நாய் கத்தும் -
மரபுவழு

354. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும் , இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது ...
வழுவமைதி

355. வழுவமைதிக்கு அடிபடையாக அமைவது எது ?
உவகை (மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம்

356. வழுவமைதி தருக
என் அம்மை வந்துவிட்டாள்
திணைவழுவமைதி

குடியரசுத்தலைவர் நாளை தமிழகம் வருகிறார் -
காலவழுவமைதி

357. இழுக்கல் இடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல் - இக்குறட்பாவில் பயின்று வந்த அணி ?
உவமையணி (உருபு = அற்றே)

358. தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. தமிழ்

ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சி மொழி என்றால் சட்டசபைமுதல் நீதிமன்றம்வரையில் தமிழ் வழங்க வேண்டும் - இது யாருடையக் கூற்று ?
மு. வரதராசனார்

359. தமிழர்களிடையே உள்ள பகை, பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே; அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று. சுவையாக இருந்தாலும் முன்னவையை நாடாதே. சுவையற்றிருந்தாலும் பின்னவைகளைப் போற்று. - இது யாருடையக் கூற்று ?
மு. வரதராசனார்

360. ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை - இது யாருடைய வரிகள் ?
பாரதியார்

361. பொருள் தருக
இசைபட
புகவுடன்

கயவர்
கீழ்க்குணமுடையோர்

நுணங்கிய
நுட்பமாகிய

வணங்கிய
பணிவான

வாயுணர்வின் மாக்கள்
வாய்ச்சுவை மட்டுமே அறிந்தோர்

அவியினும்
இறந்தாலும்

பிழைத்துணர்த்தும்

தவறாக உணர்ந்திருந்தாலும்

**பேதைமை**
அறியாமையின்பாற்பட்ட தீயசொற்கள்

**இழைத்துணர்ந்து**
நுட்பமாக ஆராய்ந்து

**ஆன்ற**
நிறைந்த

**தகையவே**
தன்மையதே

**தோட்கப்படாத**
துளைக்கப்படாத

**எனைத்தானும்**
எவ்வளவு சிறிதாயினும்

**அனைத்தானும்**
கேட்ட அளவிற்கு

**ஆன்ற**
நிறைந்த

**ஊற்றுக்கோல்**
ஊன்றுகோல்

**அற்றே**
போன்றதே

**ஒற்கம்**
தளர்ச்சி

**அவி உணவு**
தேவர்களுக்கு வேள்வியின்பொழுது கொடுக்கப்படும் உணவு
**ஆன்றோர்**

கல்வி, கேள்வி பண்பு ஆகியவற்றில் சிறந்தோர்

ஒப்பர்
ஒப்பாவர்

செவிச்செல்வம்
கேள்விச்செல்வம்

தலை
முதன்மை

போழ்து
பொழுது

ஈயப்படும்
அளிக்கப்படும்

362. இலக்கணகுறிப்பு தருக :
வயிற்றுக்கும்
இழிவுசிறப்பும்மை

அவியுணவு
இருபெயரொட்டுப் பண்புத்தொகை

ஊற்று
ஊன்று என்பதன் வலித்தல் விகாரம்

இழுக்கம்
தொழிற்பெயர்

ஒழுக்கம்
தொழிற்பெயர்

ஊற்றுக்கோல்
ஊன்றுகோல் என்பதன் வலித்தல் விகாரம்

ஆன்ற பெருமை

பெயரெச்சம்

கேளாத்தகையவே
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

அவியினும் வாழினும்
எண்ணும்மை

தளிர்க்கை
உவமைத்தொகை

பழந்தமிழ்
பண்புத்தொகை

பழந்தமிழ்
பண்புத்தொகை

சிற்றினம்
பண்புத்தொகை

பெருங்குணம்
பண்புத்தொகை

வழங்கி
வினையெச்சம்

கற்றல்
தொழிற்பெயர்

பெறுதல்
தொழிற்பெயர்

வாழ்ந்தல்
தொழிற்பெயர்

363. பிரித்து எழுதுக

செவிக்குணவு
செவிக்கு + உணவு

சுவையுணரா
சுவை + உணரா

வாயுணர்வு
வாய் + உணர்வு

364. மொழியாக்கம் தருக
Take away the fuel, the boiling will cease
எரிவதனைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்

Practice makes perfect
சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

The law - maker should not be a law breaker
வேலியே பயிரை மேய்ந்தார்போல

Misfortune never comes single
பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்

Look no gift horse in the mouth
தானம் கொடுத்த மாட்டைப் பல்லை பிடித்துப் பார்க்கலாமா?

365. "வில்லெழுதி வாழ்வார் விசும்பு" இந்த வரி இடம் பெற்ற நூல்-
முத்தொள்ளாயிரம்

366. மூவேந்தர்களை பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களை கொண்டது.
முத்தொள்ளாயிரம்

367. முத்தொள்ளாயிரம் ஆசிரியர் பெயர்-
ஆசிரியர் பெயர் தெரியவில்லை

368. முவேந்தர்களின் ஆட்சிசிறப்பு,போர்த்திறன்,கொடை பற்றிய செய்திகளை விளக்கும் நூல்-

முத்தொள்ளாயிரம்

369. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூல்-
முத்தொள்ளாயிரம்

370. மார்போலையில் எழுதும் எழுத்தாணி-
தூரிகை

371. சேர மன்னரின் அடையாள சின்னம்-
வில்

372. சோழ மன்னன் ------ யினை காக்க தன் தசையை அளித்தான்.
புறா

373. கலிங்கத்துப் பரணியை இயற்றியவர்-
சயங்கொண்டார்

374. கலிங்கத்துப் பரணியில் உள்ள தாழிசைகள்-
599

375. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற " என்ற பாடல் இடம் பெற்ற நூல்-
பன்னிரு பாட்டியல்

376. சயங்கொண்டர் பிறந்த ஊர்-
தீபங்குடி(திருவாரூர்)

377. சயங்கொண்டர் எழுதிய நூல்-
இசையாயிரம்,உலாமடல்

378. அண்ணா மிக விரும்பும் இலக்கியம் எது-
கலிங்கத்துப் பரணி

379. முதல் குலோத்துங்க சோழனின் அரசவை புலவர்-
சயங்கொண்டார்

380. ஆயிரக்கணக்கான யானைகளை போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்கு ------ என பெயர்.

பரணி

381. பரணி ------- வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
96

382. தென்தமிழ்த் தெய்வப் பரணி என அழைக்கப்படும் நூல்-
கலிங்கத்துப் பரணி

383. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு என கூறும் நூல்-
புறப் பொருள் வெண்பாமாலை

384. உலகின் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகள்-
193

385. ஏறத்தாழ தமிழனம் பரவியுள்ள நாடுகள்-
154

386. திரைகடலோடியும் திரவியம் தேடி என கூறியவர்-
ஔவையார்

387. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கூறும் நூல்-
மணிமேகலை

388. தமிழர் சிலரை அடிமைக் கூலிக்கு அமர்த்தியவர்கள்-
ஆங்கிலேயர்களும்,பிரஞ்சுகாரர்களும்

389. கோவில் கட்டி திருவிழாக்கள் நடத்தி வரும் நாடுகள்-
சிங்கப்பூர், மலேசியா,பினாங்கு தீவு

390. பரப்பளவில் சிறியதான ------ தீவில் வாழ்பவர்களும் பெரும்பான்மையோர் தமிழரே.
ரியூனியன்

391. தமிழை ஒரு பாடமாக கற்கும் நாடுகள்-
சிங்கப்பூர், மொரிசியசு,மலேசியா,பிஜித்தீவுகள்,தென் அமெரிக்கா, கனடா,பிரிட்டன்

392. யாதும் ஊரே யாவரும் கேளிர் என கூறியவர்-
கணியன் பூங்குன்றனார்

393. தமிழன் என்றால் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு என கூறியவர்-
நாமக்கல் கவிஞர்

394. ஆட்சிமொழியாக தமிழ் திகழும் நாடுகள்-
இலங்கை,சிங்கப்பூர், மலேசியா

395. குடியரசுத்தலைவர் களாகவும் தமிழர் தேர்ந்தெடுக்கும் நாடுகள்-
சிங்கப்பூர், மொரிசியசு

396. தமிழ்தென்றல் என அழைக்கப்பட்டவர்-
திரு.வி.க

397. திரு.வி.க வின் ஆசிரியர்-
கதிரைவேலன்

398. திரு.வி.க பிறந்த ஊர் மற்றும் பெற்றோர்-
துள்ளம்,விருத்தாசலனார்-சின்னம்மை

399. திரு.வி.க பணியாற்றிய பள்ளி-
வெஸ்லி பள்ளி

400. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என முழு முச்சாக வாழ்ந்தவர்-
திரு.வி. க

401. மேடைப் பேச்சுக்கு இலக்கணம் வகுத்தவர்-
திரு.வி.க

402. நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன் என கூறியவர்-
திரு.வி.க

403. திரு.வி.க வின் காலம்-
26.08.1883-17.09.1953

404. திரு.வி.க அவர்கள் மு.வ உதவியுடன் வெளியிட்ட நூல்-
வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுகைப் பிதற்றல்

405. திரு.வி.க நடத்திய இதழ்கள்-
தேசபக்தன்,நவசக்தி

406. என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற உரைநடை நூலை எழுதியவர்-
திரு.வி.க

407. காந்தி தமிழகம் வந்த போதெல்லாம் அவரின் பேச்சினை மொழிபெயர்த்தவர்-
திரு.வி.க

408. திரு.வி.க மொழிநடையை மலை என கூறியவர்-
தெ.பொ.மீனாட்சி சுந்தரர்

409. மேடைத் தமிழின் முன்னோடியாக திகழ்ந்தவர்-
திரு.வி.க

410. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்
16

411. வள்ளுவர் சொல் வாழ்கைக்கு இனிது இது என்ன ஆகுபெயர்-
சொல்லாகுபெயர்

412. பாலை இறக்கு - என்ன ஆகுபெயர்-
தானியாகு பெயர்

413. பொருள்கோள் எத்தனை வகைப்படும்-
8

414. "பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்மின்... " எனும் பாடலில் பயின்று வந்த அணி ?
தற்குறிப்பேற்ற அணி

415. "மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர் ...." எனும் பாடலில் பயின்று வந்த அணி ?

உருவக அணி

416. **பொருள் கூறுக**
**உய்ம்மின்**
பிழைத்துகொள்ளுதல்

**வள்-**
நெருக்கம்

**விசும்பு**
வானம்

**மல்லல்**
வளமை

**துலை-**
துலாக்கோல்

**ஊசி-**
எழுத்தாணி

**மொய்யிலை-**
நெருங்கியமைந்த இலை

**புறவு**
புறா

**நிறை**
எடை

**ஈர்த்து**
அறுத்து

**துலை**
துலாக்கோல் (தராசு)

**நிறை**
ஒழுக்கம்

**வன்கண்**
வீரத்தன்மை

**மேனி**
உடல்

**மருப்பு**
தந்தம்

**ஊசி**
எழுத்தாணி

**மறம்**
வீரம்

**கனல்**
நெருப்பு

**வையகம்**
உலகம்

**மொய்யிலை**
நெருங்கியமைந்த இலை

**மாறன்**
பாண்டிய மன்னன்

**களிறு**
ஆண் யானை

**தீயின் வாய்**
நெருப்பில்

**சிந்தை**
எண்ணம்
**கூர**
மிக

நவ்வி
மான்

முகில்
மேகம்

மதி
நிலவு

உகு
சொரிந்த (பொழிந்த)

புனல்
நீர்

417. பிரித்து எழுதுக
வாயினீர்-
வாயின்+நீர்

காடிதனை
காடு+இதனை

வில்லெழுதி-
வில்+எழுதி

எமதென்று-
எமது+என்று

தந்துய்ம்மின்
தந்து + உய்ம்மின்

பூட்டுமின்
பூட்டு + மின்

மருப்பூசி
மருப்பு + ஊசி

மார்போலை
மார்பு + ஓலை

எமதென்று
எமது + என்று

மொய்யிலை
மொய் + இலை

காடிதனை
காடு + இதனை

கருமுகில்
கருமை + முகில்

வெண்மதி
வெண்மை + மதி

418. இலக்கணக்குறிப்பு
கருமுகிலும் வெண்மதியும்
எண்ணும்மை

கருமுகில்
பண்புத்தொகை

வெண்மதி
பண்புத்தொகை

கடக்க
வினையெச்சம்

ஓடி
வினையெச்சம்

வியர்த்த வியர்வன்றோ
பெயரெச்சம்

இலைவேல்
உவமைத்தொகை

மருப்பூசி
உருவகம்

மார்போலை
உருவகம்

மாறன்களிறு
ஆறாம் வேற்றுமைத்தொகை

வெந்து
வினையெச்சம்

உலர்ந்து
வினையெச்சம்

எனா
வினையெச்சம்

கூர
வினையெச்சம்

செந்நாய்
பண்புத்தொகை

உயர்துலை
வினைத்தொகை

குறையா வன்கண்
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயர்ச்சொல்

வாங்குவில்-
வினைத்தொகை
நெடுமதில்-
உரிச்சொற்றொடர்

மாறன்கயிறு-
6ம்வேற்றுமை தொகை

இலைவேல்-
உவமைத்தொகை

மல்லல்
நெடுமதில்

419. கவி மணி பிறந்த ஊர்?
தேரூர் கன்னியாகுமரி dt

420. கி.பி.11 ல் வாழ்ந்த பாரசீக கவிஞர்?
கியத்தீன் அபுல்பாத் உமர்கயாம்

421. குழந்தைச் செல்வம் நூலின் ஆசிரியர்?
கவிமணி

422. உமர்க்கயாம் பாடல்களின் எண்ணிக்கை?
115

423. கவிமணியின் இயற்பெயர் என்ன?
மணி தேசிக விநாயகனார்

424. கவிமணியின் பெற்றோர் ?
சிவதாணு - ஆதிலட்சுமி அம்மையார்

425. உமர்கய்யாம் பாடல்களை தமிழில் மொழியாக்கம் செய்தவர் யார்?
மணி தேசிக விநாயகனார்

426. கவிமணியின் பாடுபொருள்கள் யாவை ?
மக்கள் அடையும் இன்ப துன்பங்கள், இறைவனது படைப்புகள்

427. கவிமணியின் படைப்புகள் ?

மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தை செல்வம், ஆசிய ஜோதி.

428. இம்மை மறுமை பற்றிய நூலின் பெயர் என்ன?
ரூபாயத்

429. ரூபாயத் நூலை மொழிபெயர்த்தவர் யார்?
கவிமணி

430. ரூபாயத் என்றால் என்ன?
நான்கடி செய்யுள்

431. மணிமேகலா தெய்வம் 'மணிமேகலையை வான்வழி தூக்கிச் சென்ற தீவு?.
மணிபல்லவத்தீவு

432. தீவத்திலகையின் உதவியால் மணிமேகலை பெறுவது?.
அமுதசுரபி

433. யாருடைய அறிவுறைப் படி மணிமேகலை ஆதிரையிடம் பிச்சை பெறுகிறாள்?.
அறவண அடிகள்

434. மணிமேகலை தனது பழம்பிறப்பை உணர்ந்த இடம் எது?
மணிபல்லவ தீவு

435. மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு வழங்கிய வரங்கள் என்ன?
பசியற்று இருக்க, விரும்பும் உருவம் பெற, வான்வழி செல்ல

436. மணிமேகலை அமுத சுரபியை பெற்றதும் சென்ற இடம் எது?
புகார்

437. மணிமேகலை யாரிடம் முதல் பிச்சை பெற்றாள் ?
ஆதிரை

438. அமுதசுரபி முற்பிறப்பில் யாரிடம் இருந்தது ?
ஆபுத்திரன்

439. அரவண அடிகள் எவ்வாறு வாழ்த்தினார் ?

அறிவுண்டாகுக

440. 30 ல் ஆபுத்திரன் நாடு அடைந்த காதை ?.
24

441. தண்டமிழ் ஆசான்?.
சாத்தனார்

442. மணிமேகலை காப்பியம் எவ்வகை மதம்?.
புத்தம்

443. இளங்கோவடிகள் காலம்?.
கி.பி.2 ம் நூற்றாண்டு கடைசங்கம்

444. பொருள் தருக
கூற்று
எமன்

பகர்வது
சொல்வது

துவ்வா
நுகராத

அகன்று
விலகி

ஆயம்
தோழியர்கூட்டம்,

கோடு
கொம்பு

ஆழி
கடல்

ஆசனம்
இருக்கை
நாத்தொலைவில்லை

சொல் சோர்வின்மை

யாக்கை
உடம்பு

பேதைமை
அறியாமை

செய்கை
இருவினை

உணர்வு
அறிவியல் சிந்தனை

அரு
உருவமற்றது

உரு
வடிவம்

வாயில்
ஐம்பொறிகள்

ஊறு
புலன்களின் இயல்பு

நுகர்வு
இன்பதுன்ப நுகர்ச்சி

வேட்கை
விருப்பம்

பவம்
பயன் நோக்கிய செயல்

தோற்றம்
பிறப்பு
பெரும்பேறு

வீடுபேறு

கோடு
கொம்பு

அலகில
அளவற்ற

தொக்க விலங்கு
விலங்குத்தொகுதி

களவு
திருட்டு

காமத்தீ
காமமென்னும் கொடிய விருப்பம்

உலையா உடம்பு
தளராத உடல்

குறளை
புறம்பேசுதல்

வெஃகல்
பெருவிருப்பம்

வெகுளல்
கடுஞ்சினம் கொள்ளுதல்

பொல்லாக்காட்சி
மாயத்தோற்றம்

சீலம்
ஒழுக்கம்

தானம்
கொடை
புரைதீர்

குற்றம் நீங்கிய

**கேண்மின்**
கேளுங்கள்

**முத்தேர் நகை**
முத்து சிரிப்பு

445. **இலக்கண குறிப்பு:**
**அரைசன்**
இடைப்போலி

**தேவியும் ஆயமும்**
எண்ணும்மை

**அருந்தவர்**
பண்புத்தொகை

**நல்வினை**
பண்புத்தொகை

**வாழ்க**
வியங்கோள் வினைமுற்று

**செய்தவம்**
வினைத்தொகை

**வீழ்கதிர்**
வினைத்தொகை

**பெரும்பேறு**
பண்புத்தொகை

**ஆழ்நரகு**
வினைத்தொகை

**தெளிதல்**

தொழிற்பெயர்

பல்லுயிர்
பண்புத்தொகை

தீவினை
பண்புத்தொகை

பேரின்பம்
பண்புத்தொகை

ஆய்தொடி நல்லாய்
இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

காமத்தீ
உருவகம்

கடுஞ்சொல்
பண்புத்தொகை

பொல்லாக்காட்சி
ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

பயன்தெரிபுலவர்
வினைத்தொகை

நல்லறம்
பண்புத்தொகை

நோக்கி
வினையெச்சம்

துவ்வா விடம்
ஈறுகெட்ட எதிர்மறைபெயரெச்சம்

446. பிறித்தறிதல்:

இயல்பீராறு
இயல்பு+ஈர்+ஆறு

நன்மொழி
நன்மை + மொழி

எனக்கிடர்
எனக்கு + இடர்

தொழுதேத்தி
தொழுது + ஏத்தி

உண்டென்று
உண்டு + என்று

நல்லறம்
நன்மை + அறம்

எழுந்தெதிர்
எழுந்து + எதிர்

அறிவுண்டாகுக
அறிவு + உண்டாகுக

446. இணைவளை நல்லாள் யார்?
அரசமாதேவி

447. "இணைவளை நல்லாள் இராசமாதேவி அருந்தவர்க் கமைந்த ஆசனம் காட்டித் ..." இதி அருந்தவர் யார்?
அறவண அடிகள்

448. பேதைமை என்றால் என்ன?
அறியாமை

449. உயிர்களின் வகைகள் என்ன?
6 (மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்குத்தொகுதி, பேய்)

450. ஆய்தொடி நல்லய் - பொருள் ?

ஆராய்ந்தெடுத்த அழகிய வளையல்களை அணிந்தவள்

451. தீவினைகளின் எண்ணிக்கை என்ன?
10 , (உடல் - கொலை, களவு, காமம்
சொல் - பொய்பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல், பயனற்ற சொல்.
உள்ளம் : பெருவிருப்பம், கடுஞ்சினம், மாயத்தோற்றம்)

452. உயர்வுடைய மக்கள் யார் ?
தேவர், மக்கள், பிரமர்

453. முத்து சிரிப்பினை உடையவர் யார்?
மணிமேகலை

454. சீத்தலைசாத்தனார் பிறந்த ஊர் எது ?
திருச்சி (சீத்தலை)

455. கூல (தானியம் ) வாணிகம் செய்தவர் யார்? இடம் ?
சீத்தலைசாத்தனார், மதுரை

456. இளங்கோவடிகள் சீத்தலைசாத்தனார்ரை எவ்வாறு பாரட்டியுள்ளார் ?
தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன்

457. மணிமேகலையின் துறவு வாழ்க்கையை கூறுவதால் மணிமேகலையை .... என்பர்
மணிமேகலை துறவு

458. மணிமேகலை நூல் .... மதசார்புடையது.
பௌத்தம்

459. பசிப்பிணி என்னும் பாவி - இவ்வரிகள் இடம்பெற்ற நூல் எது ?
மணிமேகலை

460. பசி நோய்க்கு மருந்து ...
உணவு

461. உணவே மருந்து என்னும் நூல் எது?

திருக்குறள்

462. மீதூண் விரும்பேல் என்றவர் ...
ஔவையார்

463. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் .... உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. - இவ்வரிகளை எழுதியவர் யார்?
திருமூலர்

464. "நல்வினை யென்பது யாதென விணவின்" -நூல்?.
மணிமேகலை

465. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடத்தோரே " -நூல்?.
புறநானூறு, மணிமேகலை

466. "காலை மாலை உலாவி நிதம் காற்று வாங்கி வருவோரின் காலை ட்டக் கும்பட்டுக் காலன் ஓடிப் போவானே"-நூல்?
கவிமணி

467. அறுசுவையின் பயன்கள்:
உவர்ப்பு-
தெளிவு

இனிப்பு
வளம்

துவர்ப்பு
ஆற்றல்

கார்ப்பு
உணர்வு

உவர்ப்பு
தெளிவு

புளிப்பு
இனிமை

468. கீழ்காய் நெல்லி எனப்படுவது ....

கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி

469. கீழாநெல்லியின் பயன் என்ன?
மஞ்சள்காமாலைக்கு மருந்தாகும்

470. சிங்கவல்லி எனப்படுவது எது ?
தூதுவளை (தூதுளை)

471. ஞானப்பச்சிலை என்றால் என்ன? கூறியவர் ?
தூதுவளை, வள்ளலார்.

472. குமரி எனப்படும் மூலிகை எது?
கற்றாலை

473. கரிசலாங்கண்ணி என்பதன் வேறுபெயர்கள் என்ன?
கரிசாலை, கையாந்தரை, பிருங்கராசம், தேகராசம்

474. பிருங்கராசம்-
கரிசலாங்கன்னி

475. தளை எத்தனை வகைப்படும்?
7

476. காய் முன் நிரை வருவது?
கலித்தளை

477. மாம்பழக்கவி சிங்க நாவலரின் இயற்பெயர்?.
பழனி

478. தமிழ் மருந்தின் ஆசிரியர்?.
கி.ஆ.பெ.விஸ்வநாதம்

479. மாம்பழக்கவி சிங்க நாவலரின் படைப்புகள் என்ன?
பழனிப்பதிகம், குமரகுரு பதிகம், சிவகிரிப் பதிகம், திருசெந்தில் பதிகம்.

480. மாம்பழக்கவி சிங்க நாவலரின் இயற்பெயர் என்ன ?
பழனி

481. வெ.இராமலிங்கனாருக்கு நடுவண அரசு செய்த சிறப்பு யாது?

பத்ம பூஷன் விருது அளித்து கௌரவித்தது.

482. காந்தியக்கவிஞர் யார்?
வெ.இராமலிங்கம்

483. "அன்பும் ஆர்வமும்... " எனும் பாடல் இடம்பெற்ற தலைப்பு எது ?
சமுதாய மலர்

484. நாமக்கல் கவிஞர் பாடல்களின் தலைப்புகள் யாவை?
தெய்வத்திருமலர், தமிழ்த்தேன் மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாயமலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசைமலர், அறிவுரை மலர், பல்சுவை மலர்.

485. நாமக்கல்லாரின் படைப்புகள் யாவை ?

| | |
|---|---|
| இசை நாவல்கள்-3 | கட்டுரைகள்-12 |
| தன்வரலாறு-3 | புதினங்கள்-5 |
| இலக்கியத்திறனாய்வு-7 | கவிதைத்தொகுப்புகள்-10 |
| சிறுகாப்பியயங்கள்-5\ | மொழிபெயர்ப்புகள்-4 |

486. தில்லையாடி வள்ளியம்மையின் குடும்பம் எங்கு குடியேறியது?
தென்னாப்பிரிக்கா - ஜோகன்ஸ்பர்க்

487. வள்ளியம்மை கைது செய்யப்பட்ட இடம் நாள் எது?
வால்க்ஸ்ரஸ்ட் , 23/12/1913

488. வள்ளியம்மை பற்றி காந்தியடிகள் எழுதிய பத்திரிக்கையின் பெயர் என்ன?
இந்நியன் ஒப்பீனியன்

489. தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ள நூல் எது?
தென்னாப்பிரிக்கா சத்தியாகிரகம்.

490. வள்ளியம்மைக்கு நடுவண அரசு செய்த சிறப்பு என்ன?
அஞ்சல் தலையும் அஞ்சல் உரையும் வெளியிட்டு சிறப்பு செய்தது.

491. வள்ளி எனப்பெயரிடப்பட்ட விலங்கு எது? எங்குள்ளது?
பெண்புலிக்குட்டி, சென்னை வண்டலூர் உயிரியல் பூங்கா

492. கோ-ஆப்-டெக்ஸ் சின் .. கிளைக்கு வள்ளியம்மையின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

600 (தில்லையாடி வள்ளியம்மை மாளிகை)

493. ராணி மங்கம்மாளின் கணவர் யார்?

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கர்

494. ராணி மங்கம்மாளின் மகன் யார்?

அரங்க கிருட்டின முத்து வீரப்பன்

495. மங்கம்மாள் சாலை எது?

மதுரை - கன்னியாகுமரி சாலை

496. தன்மைப்பெயர்கள் யாவை?

நான், யான், நாம், யாம்.

497. முன்னிலைப் பெயர்கள் யாவை?

நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள்.

498. படர்க்கை பெயர்கள் யாவை?

தான், தாம்.

499. பிரித்து எழுதுக:

| | | |
|---|---|---|
| குரங்கியாது | = | குரங்கு+யாது |
| பந்தாட்டம் | = | பந்து+ஆட்டம் |
| உயர்வடைந்தார் | = | உயர்வு+அடைந்தார் |
| காட்டுக்கோழி | = | காட்டு+கோழி |
| கிணற்றுத்தவளை- | = | கிணறு+தவளை |
| செப்புக்குடம் | = | செப்பு+குடம் |
| சுருப்புநாண் | = | சுருப்பு+நாண் |
| கருப்புவில் | = | கருப்பு+வில் |
| சிலப்பதிகாரம் | = | சிலம்பு+அதிகாரம் |

500. மொழிபெயர்ப்புத் தருக

| | | |
|---|---|---|
| சமஸ்தானம் | = | அரசு |
| முக்கியஸ்தர் | = | முதன்மையானவர் |
| சினிமா தியேட்டர் | = | திரையரங்கம் |
| பிளசர் கார் | = | மகிழுந்து |
| ஏரோப்பிளேன் | = | வானூர்தி |

இலாகா = துறை
அப்பாயிண்ட் = பணி அமர்த்தல்
பிரதானம் = முதன்மை
விஞ்ஞானம் = அறிவியல்
பஸ் = பேருந்து
ரயில் = தொடர்வண்டி
கஜானா = கருவூலம்
உத்தியோகஸ்தர் = அலுவலர்
டிபார்ட்மெண்டல் ஸ்டோர்= பல்பொருள் அங்காடி

501. லியோ டால்ஸ்டாய் ..................நாட்டு எழுத்தாளர்.
ரஷ்ய

502. கருத்தைப் பிறருக்கு உணர்ச்சியோடு விளக்ககூடிய ஆற்றல் உடையதாக இருப்பது ..
மொழி

503. கருத்தை உணர்ச்சியோடு பிறருக்கு விளங்க வைப்பது "சுவை" என தொல்காப்பியத்திலும் "குரல்" என இசைத்தமிழிலும் "விறல்" என நாடகத்தமிழிலும் கூறப்பட்டுள்ளது.

504. உணர்ச்சியோடு கூடிய கருத்தை சொல் வாயிலாக வெளியில் இயக்குவது இயற்றமிழ், இசை வாயிலாக விளக்குவது இசைத்தமிழ், நடிப்பு வாயிலாக விளக்குவது நாடகத்தமிழ் ஆகும்.

505. ஆடற்கலை என்பது முத்தமிழில் ... ஆகும்.
நாடகக்கலை

506. நடனம், நாட்டியம் என்பது .. ஆகும்
ஆடற்கலை

507. பழங்காலத்தில் ஆடற்கலை .. எனப்பட்டது.
கூத்துக்கலை

508. ஆடற்கலையில் வல்லவர் யார்?
கூத்தரும், விறலியரும்.

509. ஆடலின் நுட்பம் யாது?
கண்களும், கண் வழி மனமும் செல்ல ஆடுதல்.

510. "தாயாய் நின்று தரணியைத் தாங்கும் ; தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்; " இது யாருடைய வரிகள் ?
வெ. இராமலிங்கனார்

511. "தொண்டு செய்வாய்! தமிழுக்கு துறைதோறும் துறைதோறும் துடித்தே ழுந்தே! எனப் பாடியவர் யார்? நூல் ?
பாரதிதாசன் , தமிழியக்கம்

512. தன்மை ஒருமைப் பெயர்கள் எவை?
நான், யான்

513. தன்மை பன்மை பெயர்கள் எவை?
நாம், யாம்

514. யான் + ஐ
என்னை

யான் + ஆல்
என்னால்

யான் + கு
எனக்கு

யான் + இன்
என்னின்

யான் + கண்
என்ண்

515. யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது ... என திரியும்
எம்

516. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் ... எனக் குறுகும்.
நம்

517. ....... என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் போது எங்கள் எனத் திரியும்.

யாங்கள், நாங்கள்

518. நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது ... என மாறும்

நின், உன்

519. நீ + ஐ

நின்னை, உன்னை

நீ + ஆல்

நின்னால், உன்னால்,

நீ + கு

நினக்கு, உனக்கு

நீ + இன்

நின்னின், உன்னின்

நீ + அது

நினது, உனது

நீ + கண்

நின்னை, உன்கண்

தான் + ஐ

தன்னை

தான் + ஆல்

தன்னால்

தான் + கு

தனக்கு

தான் + இன்

தன்னின்

தான் + அது
தனது

தான் + கண்
தன்கண்

520. பொருள் தருக
உறுதி
உளஉறுதி

சகிப்புத்தன்மை
பொறுத்துக்கொள்ளுதல்

சொரூபம்
வடிவம்

தரணி
உலகம்

தாரம்
மனையாள்

சேவை
தொண்டு

அயலார்
உறவல்லாதோர்

கடன்
கடமை

சான்றோர்
நல்ல குணங்கள் நிறைந்தவர்

நாண்
நாணம்

ஒப்புரவு
உதவுதல்

கண்ணோட்டம்
உயிர்களிடத்து இரக்கம்

வாய்மை
உண்மை

சால்பு
சான்றாண்மை

ஆற்றுவார்
செயல் செய்பவர்

ஆற்றல்
வலிமை

மாற்றார்
பகைவர்

துலையல்லார்
ஆற்றலில் குறைந்தவர்

கட்டளை
உரைகல்

இன்னா
தீங்கு

இனிய
நன்மை

செய்யாகால்
செய்யாவிடத்து

இன்மை
வறுமை

இளிவன்று
இழிவானதன்று

திண்மை
வலிமை

ஊழி
உலகம்

ஆழி
கடல்

இருநிலம்
பெரிய நிலம்

பொறை
சுமை

521. இலக்கண குறிப்பு
அன்பும் ஆர்வமும் அடக்கமும்
எண்ணும்மை

இன்ப சொரூபம்
உருவகம்

என்ப
பலர்பால் வினைமுற்று

மேற்கொள்பவர்
வினையாலணையும் பெயர்

உள்ளதூஉம்
இன்னிசையளபெடை

அன்று
குறிப்புவினைமுற்று

**கண்ணோட்டம்**
தொழிற்பெயர்

**கொல்ல நலத்தது**
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**சொல்லா நலத்தது**
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பணிதல்**
தொழிற்பெயர்

**ஆற்றுவார்**
வினையாலணையும் பெயர்

**மாற்றார்**
வினையாலணையும் பெயர்

**இன்மை**
பண்புப்பெயர்

**திண்மை**
பண்புப்பெயர்

**சான்றவர்**
வினையாலணையும் பெயர்

**இருநிலம்**
உரிச்சொற்றொடர்

**மன்**
அசைச்சொற்கள்

**ஒ**
அசைச்சொற்கள்

522. மொழிபெயர்ப்பு தருக

One flower makes no garland.

தனிமரம் தோப்பாகாது

Little wealth little care.

மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை

Look before you leap.

ஆழம் அறியாமல் காலை விடாதே

Something is better than nothing.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை

Though he endeavours all he can.

புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்.

523. "தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா" என சிறப்பிக்கப்பட்டவர் யார்? யாரால் சிறப்பிக்கப்பட்டார்?

அறிஞர் அண்ணா, கல்கி

524. ஜார்ஜ் பெர்னாட்ஷா எந்த நாட்டை சேர்ந்தவர் ?

அயர்லாந்து

525. "இரட்சணிய யாத்திரிகம்" எழுதியவர்?

எச்.ஏ.கிருட்டினனார்

526. இயேசுக்கு மரணதண்டனை விதித்தவர்-

பிலாத்து மன்னன்.

527. இயேசுவின் சீடர் எத்தனை பேர்-

12

528. பன்னிரு சீடர்களுக்கும் இவர் அருளியது-

அறிவுரையும்,பத்துக்கட்டளையும்

529. தன்னரிய திருமேனி என்ற பாடலை பாடியவர்?

எச்.ஏ.கிருட்டின்னார்

530. எச்.ஏ.கிருட்டின்னார் பிறந்த ஊர்?
கரையிருப்பு(திருநெல்வேலி)

531. எச்.ஏ. கிருட்டின்னார் இவரின் காலம்-
23.4.1827-3.2.1900

532. எச்.ஏ. கிருட்டின்னாரின் பெற்றோர்-
சங்கநாராயணம்-தெய்வநாயகி

533. எச்.ஏ. கிருட்டினரின் ஆசிரியர்கள்
தமிழலக்கியம் - சங்கரநாராயணர்
இலக்கணம் - மாணிக்க வாசகத் தேவர்
வடமொழி - பிலவணச் சோதிடர்

534. பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற நூலை எழுதியவர்-
ஜான் பன்யன்

535. இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள்-
ஆன்ம ஈடேற்றம்

536. கிறித்துவக் கம்பர் என அழைக்கப்பட்டவர்-
எச்.ஏ.கிருட்டின்னார்

537. எச்.ஏ.கிருட்டின்னார் பணியாற்றிய பள்ளி-
சாயர்புரம்

538. கிருட்டின்னார் எழுதிய நூல்கள்-
இரட்சணிய சமயநிர்ணயம்,இரட்சணிய மனோகரம்,இரட்சணியக் குறள்

539. சுற்றுப்புறச் சுழலைப் போற்றுகின்ற இனிய திருநாளே-
போகி

540. பாலைப் பொழிந்து தரும் பாப்பா என்ற பாடலை பாடியவர்-
பாரதியார்

541. உலகின் தோன்றிய  தொன்மைக்குடிகள்-
தமிழர்களே

542. மாட்டுப் பொங்கலைத் தொடர்ந்து----- நடைபெறுவது.
எருதுவிடும் திருவிழா

543. பொங்கலுக்கு மூன்றாம் நாள்-
காணும் பொங்கல்

544. மஞ்சுவிரட்டு,சல்லிக்கட்டு நடைபெறும் மாவட்டங்கள்-
மதுரை,இராமநாதபுரம்,புதுக்கோட்டை, சிவகாசி

545. தமிழநாட்டு வட மாவட்டங்களில் எருது விடும் விளையாட்டை எவ்வாறு அழைக்கபடுகிறது-
எருதுகட்டு

546. அறுவடைத் திருவிழா கொண்டாப்படும் நாடு-
ஜப்பான்,ஜாவா

547. ஆந்திரா,கருநாடகாவில் கொண்டப்படும் விழா-
மகரசங்கராந்தி

548. பொங்கல் விழா கொண்டாபடும் நாடுகள்-
இலங்கை,மலேசிய, சிங்கப்பூர், மொரிசியசு, இங்கிலாந்து, அமெரிக்கா

549. நேர்மை என்ற துணைப்பட கதை எழுதியவர்-
இராமசாமி

550. ஒன்றன் பெயரான் என்ற பாடல் இடம் பெற்ற நூல்-
நன்னூல்

551. நாரதர் வருகிறார் என்ன ஆகுபெயர்-
உவமையாகு பெயர்

552. நான் சமையல் கற்றேன் என்ன ஆகுபெயர்-
காரியவாகு பெயர்

553. வீணை கேட்டு மெய்மறந்தேன் என்ன ஆகுபெயர்-
கருவியாகுபெயர்

554. செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது-
அடிமறிமாற்றுப் பொருள்கோள்

555. அளை என்பதன் பொருள்-
புற்று

556. ஈசன் குழுமத்தின் தலைவர்-
ஈசுவரன்

557. like hand and glove -
நகமும் சதையும் போல

558. ஒழுக்கமே ஒருவற்கு------- தருவதாகும்
பெருமையும்,சிறுமையும்

559. தமிழ் என்னும் சொல்லுக்கே ------ என்னும் பொருளுண்டு
இனிமை

560. உலகில் வழங்கும் மொழிகள்-
மூவாயிரம்

561. பழமையும் இலக்கிய வளமும் பொருந்திய மொழி-
செந்தமிழ்மொழி

562. தமிழுக்கே உரிய சிறப்பு-
ழகரம்

563. இரட்சணிய யாத் திரிகம் ------ நூலைத் தழுவி இயற்றப்பட்டது..
பில்கிரிம்ஸ் புரோகிரஸ்...

564. "எம்பெருமான் திருமேனி தீண்டினார்" - எம்பெருமான் யார்?
இயேசுநாதர்

565. காயுடை நெல்லோடு கரும்பு அமைத்துக் கட்டி "அரிசி அவல் அமைத்து வாயுடை மறையவர் மந்திரத்தால்..... வணங்குகிறேன் " - இது யாருடைய பாடல் ?
ஆண்டாள்

566. பொருள் தருக :

ஈண்டு
இவ்விடம்

புகல்வது
சொல்வது

காண்டகு
காணத்தக்க

இருப்பாணி
இரும்பு ஆணி

கடாவினார்
அடித்தார்

கீண்டு
தோண்டி

செற்றம்
சினம்

குருசு
சிலுவை

சொற்ற
சொன்ன

துளக்கம்
விளக்கம்

சுருதிமுதல்
மறை முதல்வராகிய இயேசுநாதர்

சதைப்புண்டு
சிதைக்கப்பட்டு

பன்னரிய
சொல்லுதற்கரிய

பலபாடு
பல துன்பம்

இரும்பொறை
பெரும்பொறுமை

வித்தகம்
ஆண்டவன்

தொழும்பர்
அடியார்

இசைபெறுதல்
புகழ்பெறுதல்

துங்கினவர்
உறங்கியவர்

கீண்டு
பிளந்து

இருப்புமுனை
ஆணியின் நுனி

வதைப்புண்டு
துன்பமடைந்து

மாண்படும்போது
இறக்கும்நிலை

இரட்சகர்
காப்பவர்

மன்றாடும்
மிக வேண்டுதல்

ஆகடியம்
ஏளனம்

567. இலக்கண குறிப்பு
செங்கை
பண்புத்தொகை

சேவடி
பண்புத்தொகை

வெவிருப்பு
பண்புத்தொகை

இருப்பாணி
வலித்தல் விகாரம்

கனிவாய்
உவமைத்தொகை

வன்மறவோர்
பண்புத்தொகை

568. பிரித்து எழுதுக
பங்கிட்டார்
பங்கு + இட்டார்

எழுத்திட்டார்
எழுத்து + இட்டார்

என்றாகடியமான
என்று + ஆகடியம் + ஆன

இருப்புமுளை
இருப்பு + முளை

ஈண்டிவரே
ஈண்டு + இவரே

எடுத்துரைக்கும்
எடுத்து + உரைக்கும்

இத்தகைய
இ+தகைய

மனநலம்
மனம் + நலம்

தன்னரிய
தன் + அரிய

தவிப்பெய்தி
தவிப்பு + எய்தி

மற்றிரண்டு
மற்று + இரண்டு

குருசேற்றி
குருசு + ஏற்றி

ஈண்டினியான்
ஈண்டு + இனியான்

காண்டகு
காண் + தகு

சேவடி
செம்மை + அடி

வெவ்விருப்பாணி
வெம்மை + இரும்பு + ஆணி

569. புறநானூறு பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்?
ஜி.யு. போப்

570. திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆசிரியர்??
நக்கீரனார்

571." நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரள வின்றே சாரல்" இடம் பெற்ற நூல் & ஆசிரியர்??
குறுந்தொகை, தேவகுலத்தார்

572. குறுந்தொகை தொகுத்தவர்??
பூரிக்கோ

573. குறுந்தொகையின் அடிவரையறை??
4-8

574. குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை?
401

575. காற்று மண்டலத்தில் உயிர்வளி, உப்புவளியின் சதவீதம்?
21%, 78%

576. வளிபடலத்தைச் சிதைப்பதில் பெரும் பங்கு வகிப்பது?
குளோரோ புளுரோ கார்பன்

577. நிலத்தின் வெப்பநிலையை ஒரே சீரான நிலையில் வைத்திருக்கப் பெரிதும் உதவும் மண்டலம்?
அடிநிலை மண்டலம்

578. அடி எத்தனை வகைப்படும்?
5

579. அளவடியின் மற்றொரு பெயர்??
நேரடி

580. அடிதோரும் 4 (அ) 5 சீர்களைப் பெற்று வரும் அடி?
கழிநெடிலடி

581. தொடை எத்தனை வகைப்படும்?
8

582."இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்" இதில் இடம் பெற்ற தொடை?
முரண்தொடை

583. தொடை விகற்பங்கள் எத்தனை?
35

584. (1,3) என முதல் எழுத்து ஒன்றி வருவது?
பொழிப்பு மோனை

585. (1,2,3) என முதல் எழுத்து ஒன்றி வருவது?
கூழை மோனை

586. (1,2,4) என முதல் எழுத்தை அடுத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது?
கிழ்கதுவாய் எதுகை

587. (1,3,4) என முதல் எழுத்தை அடுத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது?
மேற்கதுவாய் எதுகை

588. " பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேர தார்" இடம் பெற்ற அணி?
ஏகதேச உருவக அணி

589. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" இடம் பெற்ற அணி?
நிரல்நிறை அணி

590. அறிவன் என அழைக்கப்படும் கோள்?
புதன்

591. 1/2 ன் தமிழ் எண்?
இ

592. 1/4 ன் தமிழ் எண்?
வ

593. 3/4 ன் தமிழ் எண்?
ளு

594. 1000 ன் தமிழ் எண்?
கூ

595. 9 ன் தமிழ் எண்?

கூ

596. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை என்ன?

400 + கடவுள் வாழ்த்துப்பாடல்

597. குறுந்தொகையை தொகுத்தவர் யார்?

பூரிக்கோ

598. குறுந்தொகையை தொகுப்பித்தவர் யார்?

பெருந்தேவனார்

599. குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப்பாடலை பாடியவர் யார்?

பெருந்தேவனார்

600. (1,2) என முதல் எழுத்து ஒன்றி வருவது

இணைமோனை

601. (1,2,3,4) என முதல் எழுத்து ஒன்றி வருவது

முற்றுமோனை

602. கவிஞர் தான் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்தி கூறும்போது ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் விவது ... அணி .

ஏகதேச உருவக அணி

603. சொல் ல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி நேரே பொருள் கொள்வது ... அணி ?

நிரல்நிறை அணி

604. மொழியாக்கம் தருக :

A wolf in sheep's clothing

பசுத்தோல் போர்த்திய புலி

Union is strength

ஒற்றுமையே வலிமை

No smoke without fire
நெருப்பில்லாமல் புகையாது

Mights is right
வல்லான் வகுத்ததே வாய்க்கால்

Many things fall between the cup and the lip
கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை

605. இறையனால் களவியலுக்கு உறை கண்டவர் யார்?
நக்கீரர்

606. பத்துப்பாட்டு மற்றும் நெடுநல்வாடையின் ஆசிரியர் யார்?
நக்கீரர்

607. பிரித்து எழுதுக :
புறநானூறு
புறம் + நான்கு + நூறு

ஆரளவு
அருமை + அளவு

கருங்கோல்
கருமை + கோல்

பெருந்தேன்
பெருமை + தேன்

608. "உண்பது நாழி உடுப்பவை இரண்டே " - இது யாருடைய வரிகள் ? நூல் ?
மதுரை கணக்காயனார் மனகார் நக்கிரனார், புறநானூறு

609. பொருள் தருக :
நீர்
கடல்

கருங்கோல்
கருமை நிறமுடைய கொம்பு
உயர்ந்தன்று

உயர்ந்தது

அளவின்று
அளவினையுடையது

நிழற்றிய
நிழல் செய்த

நடுநாள் யாமம்
நள்ளிரவு

துஞ்சான்
துயிலான்

மா
விலங்கு

கல்லா
கல்வியறிவில்லாத

நாழி
அளவுப்பெயர்

ஈதல்
கொடுத்தல்

துய்ப்போம்
நுகர்வோம்

தப்புந
இழக்க

610. இலக்கணகுறிப்பு :
வெண்குடை
பண்புத்தொகை

கல்லா ஒருவற்கும்

ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

நாழி
ஆகுபெயர்

ஈதல்
தொழிற்பெயர்

துய்ப்போம்
தன்மைப் பன்மை வினைமுற்று

நிலத்தினும்
உயர்வு சிறப்பும்மை

வானினும்
உயர்வு சிறப்பும்மை

நீரினும்
உயர்வு சிறப்பும்மை

கருங்கோல்
பண்புத்தொகை

பெருந்தேன்
பண்புத்தொகை